புராதன நவீன கதாமஞ்சரி மலர்—5

0, 3: 60,

# TUKKU THUKKI

OR

# THE SATCHEL BEARER

# தூக்குத் தூக்கி கதை

BY

S. M. NATESA SASTRI,

*Pandit, Archeological Survey of Southern India.*

"முயற்சி திருவினையாக்கும்."

MADRAS:

PRINTED AT THE VAIJAYANTI PRESS.

*All Rights Reserved.*] 1914 [ரிஜிஸ்தர் செய்தது.

# அறிக்கை.

இந்நூலின் பதிப்பாசிரியர், இதனை வெளிப்படுத்தும் பாத்தியதையை, முன் பாத்தியதை பெற்றிருந்த 'மதிருஸ் ஸ்கூல்புக் அண்ட் வெர்னுகுலர் லிட்டரேச்சர் சொஸைட்டி' யாரிடமிருந்து கிரயத்துக்கு முறைப்படி வாங்கியுள்ளனர். ஆதலின் பதிப்பாசிரியர் அனுமதியின்றி இந்நூலை, முழுதுமாயினும், ஒரு பாகத்தையாயினும், இதனின் வேறு போலக் காட்டி மேலுக்குச் சிறிது மாற்றியாயினும் பிரசுரிப்பார் குற்றவாளிகளாகத் துரைத்தனத்தார் தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள்.

18528

# தூக்குத் தூக்கி கதை

முன்னொருகாலத்தில் வடநாட்டில் புஷ்பபுரமென்ற ஓர் ஊரில் தங்சிங்கு என்றொரு சேவகன் இருந்தான். அவனுக்கு மாசம் ஒன்றுக்கு 7 ரூபா சம்பளம். இந்தத் தொகையில் 5 ரூபா சாப்பாட்டுக்காகச் செலவுசெய்து மீதி 2 ரூபா மாசந்தோறும் சேர்த்துவந்தான். ஐந்து வருஷம் ஆனபின்பு ஒருநாள் கையிருப்பை எண்ணிப் பார்க்கும்பொழுது 120 ரூபாதான் இருந்தது. திரும்பித்திரும்பி நூறுதடவை எண்ணினபோதிலும் 120 ரூபாவுக்குமேல் எப்படி இருக்கக்கூடும்? ஆயினும் தங்சிங்கு பின்வருமாறு யோசிக்கலானான்:—

"ஐயோ! ஐந்துவருஷகாலமாய் நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழ உழைத்தும் மிகுந்தது 120 ரூபாவுக்கு மேல் ஒரு சின்னக்காசு கூடக் காணோமே. நல்லது, இந்த சொற்பத்தொகையைக் கொண்டு என்னதான் செய்யலாம். குடியிருக்க நல்ல வீடுதான் ஒன்று வாங்கலாமா? கூடாது. இந்தப் பணம் என் கலியாணத்துக்குப் போதுமா? போதாதே. இன்னம் ஐந்துவருஷம் உழைத்

தாலல்லவோ இன்னும் இவ்வளவாவது சேர்த்து வீடு வாங்கலாம். சாதாரணமாய் கலியாணத்துக்கு 500, 600 பிடிக்கிறதே. அவ்வளவு தொகைக்கு நான் எங்கு போகிறது? இருபது, முப்பதுவருஷம் உழைத்தாலல்லவோ அவ்வளவு கிடைக்கும். ஆகையால் என் கையிலிருக்கிற சொற்பத்தொகையால் ஒன்றும் முடியாது. இந்தப் பாழும் ஊழியத் தொழிலாகிய சேவகவிர்த்தியால் முன்னுக்கு வருவது கஷ்டம். நம்முடைய ஊரில் இப்பொழுது நவகோடி நாராயணசெட்டி என்று சொல்லும் சின்னய்யசெட்டியார் பத்து வருஷத்துக்கு முந்தி தவிட்டுச் செட்டியாய்த் தொழில் ஆரம்பித்தாராம். கையில் அவர் வியாபாரத்தில் இறங்கும்பொழுது முதல் 10 ரூபா்தான் இருந்ததாம். இப்பொழுது அவருக்கு அளவற்ற திரவியமுண்டாயிருப்பதை நாம் பார்க்கிறோமே. அவருடைய சொந்தக் கப்பல்கள் எத்தனையோ வியாபாரநிமித்தம் கடல்களில் ஓடுகின்றனவே. அவருக்குத் தொடக்கத்திலிருந்த முதலைவிட நமக்கு 12 மடங்கு முதலிருக்கிறதே. நமக்கும் ஏன் ஈசுவரன் சகாயம் செய்யக்கூடாது.”

அவன் இவ்வாறு ஆலோசித்து அன்றையதினமே சேவகத்தை விட்டுவிட்டு தனக்கும் ஈசன் சகாயம் செய்வாரென்று எண்ணி தனது இஷ்டோதாரணரான சின்னய்யசெட்டி போல தானும் தவிடுவாங்கி வியாபாரம்செய்ய ஆரம்பித்தான். அவன் நல்ல புத்திமானாகையாலும் அவனுக்கு அப்பொழுது சுக்கிரதசையான

படியரலும் வியாபாரம் செய்ய ஆரம்பித்த ஒரு வருஷத்துக்குள் போட்டமுதல் இரண்டத்தனை, அதாவது 240 ரூபா, ஆய்விட்டது. உடனே அந்த வருஷம் தவிட்டு வியாபாரத்தை மாற்றி பிளவுகடை வைத்தான். (பிளவு கடையாவது ஏழை ஜனங்களுக்குச் சில்லரையில் புகையிலை வெற்றிலை பாக்குமுதலியவை விற்கும் கடையாம்.) இதில் வெகுலாபம் கிடைப்பது வழக்கம். அந்தப்படியே தங்சிங்குக்கும் இரண்டாம் வருஷத்தில் 500 ரூபா கிடைத்தது. உடனே பிளவுகடையை விட்டு மிட்டாய்க் கடை வைக்க ஆரம்பித்தான். சிங்கு ஜாதியார்கள் விதம் விதமான ருசியுள்ள பக்ஷணங்கள் செய்வதில் மிகவும் கைதேர்ந்தவர்கள். மேலும் பணியாரக்கடை வியாபாரம் பொறுப்பானது. எல்லா பெரியமனுஷர் சினேகமுண்டாவதுடன் கடனாய் விற்பதைக் கட்டாயமாய் நிறுத்தினால் ஆரம்பித்த தொகைக்கு 5, 6 மடங்கு லாபம் சுலபமாய்த் தேறும். இதை உத்தேசித்துத் தான் தங்சிங்கு பக்ஷணக்கடையை ஏற்படுத்தினது. அவன் நினைத்தபடியே வியாபாரம் செய்யத் தொடங்கினதுமுதல் மூன்றாவது வருஷம் முடியுமுன் அவன் கையில் 3,000 ரூபா முதல் ஏறிவிட்டது. சின்னய்ய செட்டியைப்போலத் தன்னையும் ஈசுவரன் அனுக்கிரகித்திருப்பதாக எண்ணி மனமகிழ்ந்தான். இந்த மாதிரியே ஒவ்வொரு வருஷமும் வெவ்வேறு கௌரவமான வியாபாரங்கள் செய்து லாபம் அடைந்துகொண்டே பத்து வருஷ காலத்தில் பெரிய நவகோடி நாராயணசெட்டி

என்னும்படி தந்திங்கும் ஆய்விட்டான். அப்புறம் முதல் தரமான நல்முத்துக்களையும் ரவைகளையும்விட வேறு சரக்குகளைக் கையால் தொட்டுக்கூடப் பார்க்கிறதில்லை. எப்பொழுதும் அதிக சாக்கிரதை உள்ளவனாயும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவனாயும் ஈசுவரனுக்குப் பயந்து நடக்கிறவனாயும் இருந்தான். பொய் சூது வாது இவை இன்னவென்று இவனுக்குத் தெரியவே தெரியா. இவைகளில் பிரவர்த்தித்தால் ஈசன் இவ்வாறு அனுகூலப் படுத்துவாரா? மேலும் ஒரு பெரிய பணக்காரனாய்ப் போனபோதிலும் முன் தானிருந்த தரித்திர ஸ்திதியை மறக்கவேயில்லை.

பத்து வருஷத்துக்கு முந்தி அவன் இருந்த ஸ்திதி என்ன! இப்பொழுது அவனுக்குக்கிடைத்திருக்கும் பதவி என்ன! அப்பொழுது 7 ரூபா சம்பளமுள்ள சேவகன். இப்பொழுதோ மாதம் 7 ரூபா பெற்றுக் கொண்டு சேவகர்கள் அநேகர் அவன்கீழ் இருக்கிறார்கள். இப்பொழுது அவனுடைய வருமானமோ அரசனுடைய வருமானத்துக்கு ஒப்பானது. இதை எல்லாம் யோசித்து இனி நாம் இகலோக சௌக்கியத்தைச் செம்மையாய் அநுபவிக்காமலிருப்பானேன், என்று எண்ணி உடனே 60,000 ரூபாவுக்கு ஒரு பெரிய 'ப்ராஸாதம்' என்று சொல்லப்பட்ட மாளிகை புஷ்ப புரத்தில் வாங்கினான். கைலாசம் என்றால் அதற்கே தகும் என்று ஜனங்கள் சொல்லும்படியாய் அந்த 'ப்ராஸாதத்தைச்' சிங்காரித்து வேண்டிய ஏவலாளர்

முதலான எல்லாரையும் நியமித்துக் கொண்டதுமன்றி அதிக சௌந்தரியமுள்ள கமலாபாய் என்னும் ஒரு தனிகஸேட்டு பெண்ணையும் மணம்புரிந்தான். அந்தப் பெண்ணின் ஜாதகமும் நல்லதாயிருந்தது. நிமிஷம் தோறும் அவன் வியாபாரம் விர்த்தியாய்க்கொண்டே வந்தது. கலியாணம் செய்துகொண்ட இரண்டு வருஷத்துக்கெல்லாம் அவனுக்குப் புத்திரோற்பத்தியா யிற்று. இந்த முதற் பிள்ளை தாசரதியைப்போல அதிக அழகாயிருந்தபடியால் இவனுக்கு ராமசிங்கு என்று பெயரிட்டான். இவன் நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாய் வளர்ந்து வந்தான். அப்பால் மூன்று வருஷத்துக்கெல்லாம் இரண்டாவது குமாரன் பிறந்தான். தங்சிங்கு இந்தக் குழந்தைக்கு லக்ஷ்மண சிங்கு என்று பெயரிட்டான். மற்றொரு இரண்டு வருஷ த்தில் தங்சிங்குக்கு மூன்றாவது குமாரன் ஜனித்தான். இந்தக் குழந்தை எல்லாரையும்விட அதிக சௌந்தரிய மாயிருந்தபடியாலும் சேஷ்டைகள் அதிகமாயிருந்த படியாலும் இவனுக்குக் கிருஷ்ணசிங்கு என்று பெற் றோர்கள் பெயரிட்டார்கள். இந்த மாதிரி கலியாண மான ஏழு வருஷத்துக்குள் தங்சிங்கு கிளிகள் போன்ற அழகுள்ள மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனு ரானார். மூத்த குழந்தைக்கு ஐந்துவயது ஆயிற்று. தங்சிங்கு பாக்கியமே பாக்கியம்!

பெரிய பணக்காரனுகையாலும் லௌகீக தர்மத் தை நன்றாய் அறிந்திருந்தபடியாலும் தன் குழந்தை

களை முன்னுக்குக் கொண்டுவரப் போதுமானவரையில் சிரமப்பட்டான். "மூத்தது மூத்தண்ணு" என்னும் பழமொழிப்படியே ராமசிங்கு பெருமூடனாய் இருந்தான். உபாத்தியாயர்கள் என்னவிதமாய்ப் போதித்த போதிலும் அது அவன் மனதில் பதிகிறதில்லை. ஒவ்வொருபாஷைக்கு ஒவ்வொரு உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார்கள். மௌலவிகள் பண்டிதர்கள் அய்யாக்கள் முதலான எல்லோரும் முறையே வந்து குழந்தைகளுக்குப் பாடஞ்சொல்ல ஆரம்பித்தார்கள். என்றாலும் ராமசிங்குக்கு மாத்திரம் ஒன்றும் பிரயோஜனப் படவில்லை. நாளுக்குநாள் ஒரு பெரிய அண்ணைத்தையாயும் டம்பாசாரியாயும் வந்தானேயல்லாமல் ஹரி என்ற அக்ஷரம்கூட அவன் வாயில் நுழையவில்லை. விலையுயர்ந்த உடுப்புகள் தரித்துக்கொள்வதும், வயிறு வெடிக்க நன்றாய்த் தின்கிறதும், மடத்துக் காளை போல நெறிநீங்கி தறுதலைபோல் திரியும் போக்கற்ற பிள்ளைகளுடன் கூடி ஊர் சுற்றுவதும் ராமசிங்குக்குப் பெரிய வேலையாயிருந்தது. அவன் தம்பி லக்ஷ்மணசிங்கு அவனைவிட கொஞ்சம் புத்திசாலியாயிருந்தான். அதி மேதாவியாகாவிட்டாலும் சுவாமி கொடுத்திருக்கும் சொற்பப்புத்தியை நல்ல விஷயமாய் உபயோகித்து இரவும் பகலுமாய் உழைத்து ஒருவாறு தேறினான். கடைசிப் பிள்ளை கிருஷ்ணசிங்கோ அதிக புத்திக்கூர்மையுள்ளவனாகக் காணப்பட்டான். ஒரு தடவை சொல்லிக் கொடுப்பதற்குமுன் எந்தப் பாடத்தையும் கருத்தாய்ப்

படித்துக்கொள்வான். குசாக்ரபுத்தி என்றால் அவனுக்கே தகும். அவன் உபாத்தியாயர்களும் பெற்றோர்களும் அவனுடைய அறிவைக் கண்டு மகிழ்ந்தார்கள். கடைசிப் பிள்ளையாகையால் அவனிடத்தில் எல்லோரும் அதிக பிரீதியும் வைத்தார்கள். இந்தமாதிரி மூன்று பிள்ளைகளும் படித்துக்கொண்டுவர சில வருஷங்கள் கழிந்தன. ராமசிங்குக்கு வயது பதினெட்டும், லக்ஷ்மணசிங்குக்கு வயது பதினைந்தும், கிருஷ்ணசிங்குக்கு வயது பதின்மூன்றும் ஆயிற்று. இதற்குள்ளே சகல வித்தைகளையும் கிருஷ்ணசிங்கு கற்றுக்கொண்டதாய்ச் சொல்லலாம். இப்படியிருக்கையில் பின் சொல்லப்போகிற மனக்கலக்கம் அந்தக் குடும்பத்தில் நேரிட்டது.

தந்சிங்கு என்பவனுக்குக் கிழத்தனம் வரக் கொஞ்சம் ஆரம்பித்துவிட்டது. கலியாணமாய் இருபது வருஷகாலமாயிற்று. பிள்ளைகள் எல்லாம் தலை எடுக்குங் காலம். இப்படியிருக்க ஒருநாள் தந்சிங்கு தான் முப்பது வருஷத்துக்கு முன்னிருந்த தரித்திர ஸ்திதியையும் இப்பொழுது தனக்கிருக்கும் பாக்கியத்தையும் யோசித்து மனம் பூரித்ததனால் ஒன்றும் தெரியாமல் தனது மனையாளைக் கூப்பிட்டு, "அடியே கமலாபாய், நம் குழந்தைகள் வெளியிலிருந்து வந்தவுடன் ஆளுக்கு 100 ரூபா கொடுத்து இன்று பக்ஷணம் வாங்கி சாப்பிடச் சொன்னதாகச் சொல்" என்றான். ஆக்கினைப்படியே கமலாபாய், ராமசிங்கு வந்தவுடன்

அவனுக்கு வயிறு நிரம்ப பழையதுபோட்டு 100 ரூபா தகப்பனார் கொடுக்கச் சொன்னதாய்க் கொடுத்தாள். என்னத்துக்கென்றுகூட கேட்காமல் வாங்கிக்கொண்டு போய் அதைத் தான் வைத்துக்கொண்டிருந்த ஒரு தாசியிடம் கொடுத்துவிட்டான். அவன் புத்தி அவ்வளவு தான். ராமசிங்கு திரும்பினதும் திரும்பாததும் லக்ஷ்மணசிங்கு உபாத்தியாயர் வீட்டிலிருந்து வந்தான். கமலாபாய் அவனுக்கும் பழையது அளித்து 100 ரூபா தகப்பனார் கொடுக்கச் சொன்னதாகச் சொல்லிக் கொடுத்தாள். அதை அவன் சந்தோஷமாய் வாங்கிக்கொண்டு "அம்மா, இது என்னத்துக்காக" என்று கேட்க, தாயார், "பக்ஷணச்செலவுக்கு" என்றாள். ஆனால் சரி என்று அதை எடுத்துக்கொண்டுபோய் புஸ்தகங்கள் உடுப்புகள் முதலானவை வாங்கிக்கொண்டான். இவன் மூத்தவனைவிட புத்திசாலி. எல்லாரையும்விட அதி புத்திமானான கிருஷ்ணசிங்கு வீட்டுக்கு வந்து பழையதுபோடத் தாயாரைக் கேட்டான். தாயார் அவனுக்கு அமுது அளித்து 100 ரூபா கொண்டுவந்து கொடுத்தாள். அதைப் பெற்றுக்கொள்ளாமலே "என்னத்துக்காக ஒரு நாளுமில்லாமல் இன்று சாப்பிடும் பொழுது 100 ரூபா கொண்டுவந்து வைக்கிறாய்" என்று கேட்க, அதற்கு அவன் தாயார் தகப்பனார் உத்தரவு என்றும், அந்தப்படியே அண்ணன்மார்கள் பக்ஷணத்துக்காக ஆளுக்கு 100 ரூபா வாங்கிப்போயிருப்பதாகவும் அந்தமாதிரியே அவனும் வாங்கிப்போய் பக்ஷ

ணம் வாங்கி சாப்பிடுவது தகப்பனார் அபிப்பிராயம் என்றும் தெரிவித்தாள். இதைக் கேட்டு கிருஷ்ண சிங்கு வியப்படைந்து சொன்னதாவது: "ஆ, ஆ, ஆச்சரியம்! தகப்பனார்தான் நன்றாய்க் கொடுத்தார். நீயும் நன்றாய் வாங்கிவந்தாய்; உங்களிருவர்களுடைய புத்தியே புத்தி! வயிறு வண்ணான் தாழியா! 100 ரூபா பக்ஷணம் எப்படி ஒரு மனுஷன் ஒருநாளில் சாப்பிடுவான். நல்லது இப்படி பிரதிதினம் 300 ரூபா பையன்களுக்குக் கொடுக்க ஆரம்பித்தால் எத்தனை நாள்தான் ஆஸ்தி இருக்கும். இரண்டொரு ரூபாவுக்கு ஒரு மனுஷன் பக்ஷணம் வாங்கிச் சாப்பிடுவதே அதிகமல்லவா? இதெல்லாம் தெரியாமல் அவர் ஏதோ மதிமயங்கிக் கொடுத்துவிட்டாலும், நீ குடும்ப யோக க்ஷேமத்தில் கருத்துள்ளவள், எப்படி வாங்கிவந்தாய்? எனக்கு இந்தப் பணத்தில் ஒரு காசுகூட வேண்டாம். அண்ணன்மார் இருவரும் தெரியாத்தனத்தால் வாங்கிப் போனதுபோல் நானும் வாங்குவேனோ?" என்று சொல்லி தாயாரைக் கண்டித்தான். பணத்தையும் திருப்பிவிட்டான்.

இதையெல்லாம் கேட்டு தாயார் மனமகிழ்ந்து 'இவனல்லவோ பிள்ளை, மற்றிருவரும் அணிற்பிள்ளை, தென்னம் பிள்ளைகள்' என்று எண்ணிக்கொண்டு அப்பொழுதுதான் கிருஷ்ணசிங்கு செய்த உபதேசத்தால் அவளுக்கும் புத்தி வந்தபடியால் பணத்தை எடுத்துக் கொண்டு புருஷனிடம் சென்று கடைசிப்பிள்ளை சொன்

னதையெல்லாம் சொல்லி அவன் பாகத்தைத் திருப்பிக் கொடுத்தாள். அவனுடைய புத்திசாலித்தனத்துக்கு தந்சிங்கு அதிக வியப்படைந்து 200 ரூபாய் கொடுக்கச் சொன்னான். கிருஷ்ணசிங்கு அதையும் திருப்பிவிடவே தந்சிங்கு கோபவசத்தனாய், "எப்பொழுதும் தாழ்மையுள்ள நீ இந்த மாதிரி இன்று ஆரம்பித்த காரணம் என்ன" என்று பிள்ளையைக் கேட்டான். அதற்கு பையன் "ஐயா நீர் இன்று முதல் அசாத்திய காரியங்களைச் செய்யத் தொடங்கினதால் நானும் என் வழக்கத்தை மீறலாயிற்று" என்றான். கிழத்தனம் மேலிடவே தந்சிங்குக்கு முன்னிருந்த அமரிக்கை போய்விட்டது. பணமதத்தால் தான் என்னும் அகம் பாவம் உண்டாயிருந்தது. தனக்கு சாத்தியப்படாத காரியங்கள் ஒன்றுமில்லை என்று அவன் எண்ணின படியால் தன் கடைசிக்குமாரன் சொன்ன ஹிதோப தேசங்கள் எல்லாம் அவன் கோபத்துக்கு ஆகுதி போலாயிற்று. கண் கடை தெரியாமல் கோபம் வந்து தந்சிங்கை மூடிக்கொள்ளவே, அவன் "அடா பயலே இந்த உலகத்தில் எனக்கு அசாத்தியமான காரியம் என்ன இருக்கிறது சொல்" என்றான். கிருஷ்ணசிங்கு என்ன புத்திமானாயிருந்தும் சிறுபிள்ளையாகையால் தகப்பனார் அடைந்திருக்கும் கோபத்தைப் பார்த்து விட்டுக் கொடுக்காமல் இதுதான் நல்ல சமயம் இவர் மூட்டாள்தனத்தை நாம் நன்றாய்க் களையவேணும் என்று நினைத்து, "ஐயா என்னைப் பெற்றவரே, என்

பேரில் கோபிக்கவேண்டாம். தங்களுக்கு அசாத்திய மான காரியங்கள் உண்டென்று உதாகரிக்கும்பொருட்டு இரண்டொன்று சொல்லுகிறேன். என்பேரில் கெட்ட அபிப்பிராயம் கொள்ளவேண்டாம். எனக்கு இந்த ஊர் ராஜகுமாரத்தியை விவாகம் செய்துவைப்பீர்களா? எனக்கு அந்தப் பெண்மேல் ஆசை என்றும், நான் அரசனுக்கு மருமகனுகவேணுமென்றும் சொன்னதல்ல; தங்களால் செய்ய அசாத்தியமான காரியத்துக்கு ஒரு உதாரணமாக எடுத்துக் கூறியது; மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று முடித்தான். வயதில் சிறுவனுயிருந்தும் புத்தியில் முதிர்ந்தவனுயிருந்த கிருஷ்ணசிங்கின் உபதேசங்கள் தகப்பனர் காதில் நாராசம்போல் விழுந்தன: "அடா துஷ்டா, முகத்தில் மீசை முளேக்குமுன் உனக்கு இவ்வளவு ஆசையா? நாம் இப்பொழுது என்ன நல்ல தசையிலிருந்தாலும் நமது தகப்பனர் முதலில் தவிட்டு வியாபாரம்பண்ணின தந்சிங்கு என்பதை மறந்துவிட்டாய்" என்று சொல்லிக்கொண்டே காலில் போட்டிருந்த இரண்டு செருப்புகளையும் கழற்றி உச்சந்தலே மயிர் உதிர கை சோருமளவும் தனது அதி புத்திசாலியாகிய மகனே அடித்தான். கிருஷ்ணசிங்கோ மிகுந்த பொறுமையுடன் அடிகளே சிரசால் முகம் கோணுமல் வகித்து தகப்பன் கை ஓய்ந்து நின்றவுடன் செருப்புகள் இரண்டையும் வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு காற்றுடிபோல் பறந்தான். இருட்டுமளவும், தன் சிநேகிதர்கள் அல்லது

பந்துக்களுடைய கண்களில் தென்படாமல், புஷ்பபுரத்தில் பதுங்கியிருந்து இருட்டினபின் ஊருக்குச் சமீபத்திலிருக்கிற காளிகோயிலில் சென்று, அங்கொரு பிரகார சுவரிலிருக்கும் ஒரு பெரியமாடத்தில் செருப்புகள் இரண்டையும் ஒளித்து ஒருவரும் எடுக்காமலிருக்க காறைபூசி இனி இந்த ஊரிலிருப்பது நமக்குச் சரியல்லவென்று எண்ணி அன்றிரவே ஓடிப்போனான். தெய்வத்தின்பேரில் பாரத்தைப் போட்டு தெய்வம் விட்டவழியாகிறது என்று எண்ணிக்கொண்டு புஷ்பபுரத்தினின்றும் வடக்கு நோக்கிப்போகிற வழியே சென்றான். கால் சோருகிறவரையில் நடக்கிறதும் காட்டுக் கனி கிழங்குகளைப் புசிக்கிறதும் ஆற்று அல்லது ஊற்றுத் தண்ணீர்களைக் குடிக்கிறதும் தூக்கம் வந்தபோது வெட்டவெளியிலும் மரத்தின்கீழும் படுத்துறங்குகிறதுமாய் ஒரு மாதகாலம் நடந்து காடு மலைவனம் வனாந்திரங்களை எல்லாம் கடந்து கடைசியாய் ஒரு பெரும் பட்டணம் வந்துசேர்ந்தான். அந்த ஊரின் பெயரை விசாரித்தபோது அது தாராபுரம் என்றும், அதன் அரசன் ஏகசக்கிராதிபதி என்றும், ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் தாராபுரம் மகா மண்டலேச்வரனுக்கு கப்பம் கட்டப்பட்டவர்கள் என்றும் தெரிய வந்தது. அப்பேர்ப்பட்ட தாராபுரத்தில், கிருஷ்ணசிங்கு கடைசியாய் வந்து சேர்ந்தான்.

தாராபுரம் மகா மண்டலேச்வரருக்குப் புத்திரன் என்னும் பாக்கியமில்லை. ஆனால் அவருக்குப் பெண்

இரத்தினம் ஒன்றுண்டு. அவள் தெய்வலோகப் பெண் களெல்லாம் வியப்படையத்தக்க அவ்வளவு அதிசய சௌந்திரியமுள்ளவள். மண்டலேச்வரருக்கு நமது பெண்ணைத்தவிர ரூபவதியாவது ரூபவானாவது இது வரையில் உண்டானதுமில்லை, இனி உண்டாகப்போகி றதுமில்லை என்று கர்வமுண்டு. அந்தப் பெண்ணின் பெயர் சந்திரமுகி. அவளுக்கு அப்பொழுது ஒன்பது வயது. அந்த ஊரிலிருக்கும் ராஜகுமார கலாசாலை என் னும் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தாள். ராஜகுமார கலாசாலை என்பது ராஜகுமாரன் குமா ரத்தி மந்திரிகுமாரன் குமாரத்தி முதலான, அரண் மனை வாலிபர்களுக்கு மாத்திரம் படிக்க அந்த ஊரில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஒரு வித்யாஸ்தானம். அவ் விடத்தில் ராஜகுமாரத்தி சந்திரமுகியும் மந்திரிகுமா ரன் ராமச்சந்திரனும் பிரதானிகுமாரன் முதலாகிய மற் றுஞ் சிறுவர்களும் படித்துவந்தார்கள். பிரதிதினம் சந்திரமுகி அரண்மனையிலிருந்து கலாசாலைக்குப் போ கும்போது அவளுக்குப் பின்னை அவளைக் காத்துக் கொண்டு கத்தியும் கையுமாய் நூறு போர்வீரர்கள் போவதும் அவள் படிக்கும் காலமெல்லாம் வாசலில் காவலிருந்து சாயந்திரம் திரும்பி அரண்மனையில் கொண்டுவந்து விட்டுப் போவதும் வழக்கம்.

கிருஷ்ணசிங்கு தாராபுரத்தில் தெருத்தெருவாய் அல்லாடிக்கொண் டிருக்கும்போது ஒருநாள் ராஜ குமார கலாசாலையிருக்கும் தெருவழியே போனான்.

வாசலிலிருந்த போர்வீரர்களில் ஒரு ரஜபுத்திரன் இவ னுடைய இளவயதையும் சௌந்தரியத்தையும் பார்த்து வியப்புற்று இவனுடைய பரதேசிக் கோலத்தைக் கண்டு மனதிரங்கி " அடா ஙபபா இங்குவா " என்று ஆதர வாய் அழைத்தான். இந்த தூரதேசத்தில் இவ்வுளவு அன்புடன் நம்மை அழைப்பது யாராக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டே அவனிடம் போக, அந் தப் போர்வீரன் "நீ யாரப்பா, எந்த ஊர், எங்கு போகி ருய் ?" என்று வினவினன். அதைக் கேட்டவுடன் கிருஷ்ணசிங்கு ஒன்றும் தெரியாதவன்போல அபி நயித்து, "ஐயா நான் தாய் தகப்பன் இல்லாத அநாதை" என்று சொன்னன். இப்படி இவர்கள் பேசிக்கொண்டு இருக்கையில் சந்திரமுகி தாகசாந்திக்காக வெளியே வந்தாள். அதிபால்யமாயும் ஒப்பில்லா ரூபவானயும் அநாதைபோலும் காணப்பட்ட கிருஷ்ணசிங்கை சற்று நேரம் உற்றுப் பார்த்து, "நீ யாரப்பா" என்று வின வினள். போர்வீரனிடம் சொன்னதுபோலவே இவ ளிடமும் தான் அநாதை என்று சொல்லிவிட்டான். இவ்வளவு சௌந்தரியமுள்ளவன் அநாதை என்று கேட்கவே ராஜகுமாரத்தி மனமிரங்கி, "ஆனல் நீ என்னிடம் வேலைக்கு அமருவாயா? நான் எனக்குச் சமமாய் உன்னை நடத்திவருகிறேன்; கஷ்டமான வேலை உனக்கு நான் ஒன்றும் இடுகிறதில்லை. நான் அரண்ம னையிலிருந்து கலாசாலைக்கு வரும்பொழுதும், கலாசாலை யிலிருந்து அரண்மனைக்குப் போகும்பொழுதும் என்

பின்னை என் புஸ்தகத் தூக்கை எடுத்துவர தூக்குத் தூக்கி ஒருவன் வேண்டியிருக்கிறது. அந்த வேலையைச் செய்து கொண்டு நீ என்னிடம் சௌக்கியமாய் இருக்கலாம்" என்றாள். இதைக் கேட்டவுடன் கிருஷ்ணசிங்கு 'இதைவிட நமக்கு நல்ல சமயம் கிடைப்பது துர்லபம்' என்றெண்ணி உடனே "அப்படியே ஆகட்டும்" என்று அந்த க்ஷணமே அவள் பின்னே சென்று தூக்குத் தூக்கி வேலையை ஒப்புக்கொண்டான். இந்த வேலையாளை நியமித்துக்கொண்டதற்குத் தகப்பனுடைய உத்தரவையும் சந்திரமுகி பெற்றுக்கொண்டாள். அன்றுமுதல் ராஜகுமாரத்திக்குச் சமீபத்தில் அவள் இட்டமே போஜனமும் விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களும் இன்னும் அனேகவித மரியாதைகளும் தூக்குத் தூக்கியாகிற கிருஷ்ணசிங்குக்கு நடந்து வந்தன. தூக்குத் தூக்குகிற தொழில் ஒன்றைத்தவிர மற்ற விஷயங்களில் ராஜ மரியாதைகள் நடந்துவந்தன. அந்தப்புரத்தில் இவ்வளவு சிறு பையனை தாராளமாக போகவரச் செய்வதைப் பார்த்தால் மஹா ராஜா ஒருகால் தன் பெண்ணையே இவனுக்குக் கடைசியாய் மணம் செய்துகொடுக்க உத்தேசித்திருக்கலாம் என்று ஜனங்கள் ஒருவருக்கொருவர் ரகசியமாய்ப் பேசிக்கொண்டார்கள். அப்படி ஜனங்கள் பேசுவதற்கு தூக்குத் தூக்கியின் அழகானது அநுகுணமாயிருந்தபோதிலும் அவன் ஒரு பெரிய முட்டாள் என்று எல்லாரும் எண்ணும்படி அவன் நடந்துவந்தமையால் அப்படிப்

பட்ட மூடனுக்கு சந்திரமுகியை, மண்டலேச்சுவரன் கொடுப்பாரா என்று சந்தேகிக்க வேண்டியதாகவு மிருந்தது. கிருஷ்ணசிங்கு தான் தூக்குத் தூக்கி வேலை யில் அமர்ந்த நாள்முதல் நிரக்ஷரகுக்ஷிபோல் நடந்து கொண்டது வாஸ்தவமே. "எழுதப் படிக்க ஏதாவது தெரியுமா" என்று மந்திரிகுமாரனுகிய ராமச்சந்திரன் ஒருநாள் கேட்டபொழுது "அதுக்கும் நமக்கும் வெகு தூரம் அந்த சனி ஒன்றும் எனக்குத் தெரியாது" என்று சொன்னுன். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஒன்றும் தெரியாதவன்போல் கிருஷ்ணசிங்கு நடித்து வந்தபடியால் அவனைப் பற்றி எல்லாரும் அப்படி எண்ணவேண்டியதாயிற்று. சந்திரமுகியும் அவனை அப் படியே நினைத்திருந்தாள். ஆயினும் அதற்காக அவ னிடத்தில் விசுவாசத்தையாவது போஷணவிஷயங் களையாவது அவள் குறைக்கவே இல்லை. வெகு அன்னி யோன்னியமாயும் அன்பாயும் இருந்தபோதிலும் அவள் மனதில் அவனைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டும் என்ருவது அல்லது வேறுவிதமான கெட்ட எண்ணங் களாவது சத்தியமாய் இல்லவே யில்லை. கிருஷ்ணசிங்கு மட்டில் தான் அவளைப்போன்ற அல்லது அவளுக்கும் மேலான புத்திமான்தான் என்று கொஞ்சம் காட்டி யிருந்தால் அவள் அவனை மணக்க எண்ணம்கொண்டி ருக்கக் கூடும். இவைகள் இப்படியிருக்க, மண்டலேச் சுவரனுக்கு மாத்திரம் தன் மகளை கிருஷ்ணசிங்குக் கே கலியாணம் கடைசியாய் செய்துவைத்துவிடுவோம்

என்னும் எண்ணம் கொஞ்சமுண்டு. எவ்வளவு முட்டாளாயிருந்தபோதிலும், ஆள் கண்ணுக்கு வெகு லக்ஷணமாயிருப்பதினாலேயும், தன் குமாரத்திக்குச் சரியான அழகுள்ள வாலிபன் கிடைப்பது துர்லபமென்று எண்ணினபடியினாலேயும், சந்திரமுகி அதிபுத்திசாலியாகையால் புருஷசகாயம் இல்லாமலே தனக்குப் பிற்காலம் ராஜ்யபாரத்தை வகிக்கலாம் என்று தோன்றினபடியினாலேயும் மண்டலேச்சுவரனுக்கு இந்த மந்திரியான உத்தேசமிருந்தது. இப்படி உத்தேசித்திருந்தபடியால்தான் கிருஷ்ணசிங்குக்கும் சந்திரமுகிக்கும் உண்டாகும் அந்யோந்யத்தை மஹாராஜன் கண்டிக்காமல் கண்ணோக்கமாய் விட்டுவந்தார். அப்படியானால் கிருஷ்ணசிங்கை ஏன் படிப்பிக்கவில்லை என்று கேட்டால், ஒருகால் இவனை மணம்புரிய தான் கொண்ட எண்ணம் நிச்சயமாய் ஜனங்கள் மனதில் பதிந்துபோமோ என்று நினைத்து இருந்தார் என்று சொல்லலாம்; கதைக்குக் காலில்லை என்றும் சொல்லலாம்.

இந்தமாதிரியே ஏழு வருஷகாலம் சென்றது. சந்திரமுகி தன்னுடைய பதினாறும் வயதில் ப்ரௌடையானாள். வீடு தீண்டக்கூடாத மூன்றுநாள்மட்டில் தனியேயிருந்து பிறகு வழக்கம்போலவே கலாசாலைக்குப் போய்க்கொண்டே வந்தாள். மந்திரிகுமாரனாகிய ராமச்சந்திரன் வெகுநாளாய் சந்திரமுகியின்பேரில் பிரீதி வைத்திருந்தான். இரண்டொருதடவை " என்னை

விவாகம் செய்துகொள்வாயா?" என்று வாய்விட்டுக் கேட்டிருப்பதுமுண்டு; அதற்கு ராஜகுமாரத்தி அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டதுமுண்டு.

சந்திரமுகியானவள் ப்ரௌடையானபின் கலாசாலைக்கு வந்துகொண்டிருக்கும் ஒருநாள் ராமச்சந்திரன் பள்ளிக்கூடம் முடியும் முன்னமே தலைவலி என்று சாக்குச்சொல்லி இரண்டு நாழிகை உத்தரவு வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போகாமல் ராஜகுமாரத்தி வரும் வழியை எதிர்பார்த்தவனாய் ஒரு தேர்முட்டியில் உட்கார்ந்திருந்தான். போய் உட்கார்ந்த க்ஷணத்துக்கெல்லாம் முன்பு தூக்கை எடுத்துக்கொண்டு தூக்குத் தூக்கியும் சந்திரமுகியும் அவள் பின்னால் நூறு போர்வீரர்கள் வருவதையும் கண்டு கண்குளிர்ந்தான். உடனே எதிர் சென்று நான் உன்னிடத்தில் சில சங்கதிகள் பேசவேண்டியிருப்பதால் தூக்குத் தூக்கியைக் கொஞ்சம் முன்னாலும் போர் வீரர்களைக் கொஞ்சம் பின்னாலும் போகச்செய்வாயா என்றான். அவள் அப்படியே செய்து தேர்முட்டியருகே வந்தாள். முன்னால் ஓடுவதுபோல் தூக்குத் தூக்கி அபிநயித்து இவர்கள் இருவரும் தேர்முட்டியண்டை உட்காரப்பார்த்துத் திரும்பி, இவர்களறியாமல் ஓடிவந்து மறுபக்கமாய்த் தேரிலேறி இவர்கள் சம்பாஷணையை உற்றுக்கேட்க உட்கார்ந்துவிட்டான். இவன் வந்து உட்கார்ந்ததும் ராமச்சந்திரன் சந்திரமுகியைப் பார்த்துச் சொன்னதாவது: "சந்திரமுகி! உனக்கும் நமக்கும் முன்னமேயே பேச்சா

யிருக்கிறதல்லாவா? இதுவரையில் நீ பருவமடைய வில்லை என்று காத்திருந்தேன்; இனி என்ன சொல்லு கிறாய்" என்றான். சந்திரமுகி, "அப்படியே செய்வ தில் எனக்கு ஆக்ஷேபமில்லை; ஆனால் நாம் இருவரும் இந்த ஊரில் கலியாணம் செய்து கொள்வது அசாத்தி யவிஷயம். என் தகப்பனாருக்கு என்னை அதிசௌந்தரி யமான ஒருவருக்குக் கொடுக்க அபிப்பிராயமாகையால் உங்களுக்குக் கொடுக்கமாட்டார்; ஆகையால் நாம் இரு வரும் இந்த ஊரைவிட்டு வேண்டுமான திரவியத்துடன் வேறு ஊர் போய் அங்கு கலியாணம் செய்துகொண்டு சுகமாயிருப்போம். இன்று எட்டாம் நாள் ஞாயிற்றுக் கிழமைக்குள் ஒருவரும் அறியாமல் நான் எவ்வளவு பணம் அனுப்பக்கூடுமோ அவ்வளவு அனுப்புகிறேன். நீங்களும் உங்களால் எவ்வளவு கொண்டுவரலாமோ அவ்வளவு கொண்டு வாருங்கள்" என்று சொல்லி அன்று எட்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஓடிப்போகத் தீர்மானித்தார்கள். பிறகு படிப்புவிஷயமாய்ப் பேச ஆரம்பித்ததைக் கண்டு இனி நாம் இங்கு இருக்கக்கூடா தென்று நிச்சயித்து தேரை விட்டுத் தூக்குத் தூக்கி மெதுவாய் இறங்கி எவ்வளவுதூரம் போயிருக்கலாமோ அவ்வளவு தூரத்துக்குக் கொஞ்சம் கூடவே ஓடிப் போய்விட்டான்.

நடக்கிற சங்கதி இன்னதென்று தெரியாமல் போர்வீரர்கள் படிப்புவிஷயமாய்த்தான் பேசிக்கொள் வார்களென்று பின்னிருந்தார்கள். பேச்செல்லாம் முடி

ந்து நாளை நிச்சயித்துவிட்டு, தாங்கள் இருவரும் செய்த சங்கற்பம் ஒரு பிராணிக்குக் கூட தெரிந்திருக்கமாட்டாதென்ற எண்ணத்துடன் சந்திரமுகியும் ராமச்சந்திரனும் தம்தம் அரண்மனை சேர்ந்தார்கள்.

இரவு முழுதும் சுகமாகவே கழிந்தது. பொழுது விடிந்தவுடன் தூக்குத் தூக்கியானவன் சந்திரமுகியை விட்டுக் கொஞ்சம் பிரிந்து மண்டலேச்சுவரனிருக்கும் கொலுமண்டபத்தண்டை வந்தான். அங்கே மகாராஜனிடம் சென்று "சக்கரவர்த்தியே, நான் ரகசியத்தில் தங்களிடம் கொஞ்சம் பேச அபிப்பிராயப்பட்டிருப்பதால் எனக்கு அனுமதிகொடுக்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான். இதைக் கேட்டதும் மண்டலாதிபன் ஆனந்தமடைந்து எல்லாரையும் அறையை விட்டுப் போகச் சொல்லி தானும் வீர சிம்மாசனத்தை விட்டு நாற்காலியிலுட்கார்ந்து இனி மாப்பிள்ளையாகப் போகிற தூக்குத் தூக்கிக்கு சம ஆசனம் கொடுத்து சமாசாரம் என்னவென்று கேட்டார். தூக்குத் தூக்கி அதிக தந்திரியாகையால் சக்கரவர்த்தி தன்னிடம் வைத்திருக்கும் அன்பு அவனுக்கு நன்றாய்த் தெரியும். ஆனதுபற்றி கோபம் கொண்டவன்போல் காட்டி "தாங்கள் அப்பியசித்திருக்கும் ராஜநீதி முறைமை இப்போது நடக்கிறபடி-தானே" என்றான். தலைகால் இல்லாமல் இப்படி கேட்டதையும் ராஜநீதியில் ஒன்றும் தெரியாத தூக்குத் தூக்கி தன்னை வினவினதையும் கேட்டு வியப்புற்று "நீ கேட்கும் ப்ரசனம் எதைக்குறித்து" என்று

மகா மண்டலேச்சுவரன் கேட்க, அதற்குத் தூக்குத் தூக்கி "அரசர்கள் தங்கள் குமாரத்திகளை எப்படி படிப்பிக்கவேண்டியது. தாங்கள் அறிவீர்களா?" என்ருன். அதைக்கேட்டு மகாராஜன் 'இவன் முட்டாள் என்றெண்ணி மோசம்போனேமே. இவன் இப்பொழுது கேட்ட ப்ரசனத்தின் அழகொன்றே இவன் புத்தியை வெளியிடப்போதும். நல்லது இவனையே கேள்விக்கு மறுமொழி சொல்லச்சொல்வோம்' என்று யோசித்து, "அந்தவிஷயம் எனக்குத் தெரியாது நீயே சொல்லவேண்டும்" என, தூக்குத் தூக்கி அரசர்கள் தங்கள் குமாரத்திகளை ஐந்து வயது முதல் ஏழு வயது வரையில் வெளியில் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பலாம் என்றும், பிறகு ஏழு வயது முதல் பருவமடையும் வரையில் வெளியிலனுப்புவதை நிறுத்தி உபாத்தியாயரை அரண்மனைக்கு வரவழைத்துப் பாடம் கற்பிக்க வேண்டுமென்றும் பருவமடைந்த பிறகும் ராஜகுமாரத்திகளுக்கு உபாத்தியாயர்கள் கற்பித்துத்தான் படிக்கவேணுமென்றிருந்தால் திரைபோட்டுக்கொண்டு திரையின் ஒரு பக்கம் உபாத்தியாயரும் மற்றொருபக்கம் ராஜகுமாரத்தியுமாய் படிக்கவேணு மென்றும் வெகு ராஜநீதிகள் சொல்லுகின்றன. இவைகளையெல்லாம் தாங்கள் அதிக்கிரமித்தது மல்லாமல் பருவமடைந்த பிறகுகூட உபாத்தியாயரை வீட்டுக்கு வரவழைக்காமல் ராஜகுமாரத்தியை கலாசாலைக்கு அனுப்பிவந்தீர்கள். இவைகளின் பலன் சீக்கி

ரம் ஒரு வாரத்துக்குள்ளாக நீங்களே அனுபவிக்கப் போகிறீர்கள்" என்று முடித்தான். இவைகளைக் கேட்டு மண்டலேச்சுவரன் திடுக்கிட்டு விஸ்தாரமாய்ச் சொல்லக் கட்டளையிட தூக்குத் தூக்கியாகிய கிருஷ்ண சிங்கும் நடந்ததை நடந்தபடிசொல்லி முடித்தான். இவனுடைய சாமர்த்தியத்தையும் புத்திகூர்மையையும் கண்டு மண்டலேச்சுவரன் மகிழ்ந்து "நான் அப்படி நடக்காமலிருக்கக், கூடிய ஜாக்கிரதை செய்கிறேன். நீ மட்டும் இந்த சங்கதியை ஒருவரிடமும் சொல்லாமல் உன் மனதிலேயே வைத்திருப்பாயாக" என்று சொல்லி தூக்குத் தூக்கியை அனுப்பிவிட்டான்.

மகாராஜன் உடனே அந்த ஊரிலிருக்கும் தொழிலாளிகள் யாவருக்கும் சீக்கிரமாய் ஓர் உத்தரவு அனுப்பி நாலு நாழிகைக்குள் அந்த ஊரிலும் சுற்று பத்துநாழிகை வழிதூரத்திலுமுள்ள தச்சன், கொற்றன், கொல்லன், ஒட்டன் முதலான தொழிலாளிகள் எல்லோரும் அரண்மனையண்டை வரவேண்டுமென்று கட்டளையிட்டார். ராஜாக்கினையை யார்தாம் அதிக்கிரமிப்பார்கள்? உத்தரவு கண்டவுடன் அவனவன் ஆக்கினையை சிரசால் வகித்துக்கொண்டு பாக்குக்கடிக்கும் நேரத்துக்குள் வந்து சேர்ந்துவிட்டான். அவர்களை நோக்கி மகாராஜாவானவர் இரண்டு தினத்துக்குள் ஏழுநிலை மாடமுள்ள ஒரு பெரிய மாளிகை தன் அரண்மனைக்குச் சமீபத்தில் கட்டவேண்டியதென்றும், அப்படி இரண்டுநாளைக்குள் நிர்மாணிக்கத் தவறினல்

மாறுகால் மாறுகை வாங்கிக் கண்ணையும் பிடுங்கி விடுவதாகக் கட்டளையிடவே, தொழிலாளிகள் எல்லோரும் ஒருநாளில் வேலையை முடித்துப் பச்சைத்தண்ணீர் பல்லில் விடுவதாகத் தெரிவித்தார்கள். மண்டலேச்சுவரன் மந்திரிமுதலான எல்லா உத்தியோகஸ்தர்களையும் தங்கள் தங்கள் வேலையை நிறுத்திவிட்டு ஏழு உப்பரிகையுடன் கூடிய மாளிகை கட்டவேண்டிய சாமக்கிரியைகளை சேகரித்துக்கொடுத்துக்கொண்டிருக்கக் கட்டளையிட்டு, தம் குமாரத்தியாகிய சந்திரமுகியிடம் போய் திருடனைக் காப்பதுபோல அன்று முடிய அவளிடமே உட்கார்ந்திருந்தார். மாளிகை வேலை அதிவேகமாய் நடந்துகொண்டிருந்தது. அன்று சூரியசந்திரர்கூட ராஜாக்கினைக்குப் பயந்து நடந்ததாகக் கதை சொல்லுகிறது. மாளிகை கட்டுகிறது இதற்கு என்று ஒருவருக்காவது தெரியாது ; மண்டலேச்சுவரனைக் கேட்கவும் ஒருவருக்கும் நா எழவில்லை. கணப்பொழுதும் வீணாகாமல் வேலை அதி மும்மரமாய் நடந்து அன்று அஸ்தமித்து நாலு நாழிகைக்கெல்லாம் மாளிகை முடிந்துவிட்டது. முடிந்த சங்கதியையும் கிரகப்பிரவேசம் செய்யலாம் என்பதையும் சொல்லி மந்திரிமுதலான உத்தியோகஸ்தர்களும் தொழிலாளிகளும் மகாராஜாவின் அனுமதிபெற்று வீடுபோய்ப் பல் தேய்த்தார்கள். மாளிகை சித்தமானதாகக் கேட்டவுடனே சக்கரவர்த்தியானவர் ஸ்திரீகளின் அந்தப்புரத்தில் வேலை செய்வதற்காக நியமிக்கப்பட்ட பேடிகள் எல்லாரையும் கூப்

பிட்டு முதல் மூன்று மாடிகளில் கத்தியும் கையுமாக இருக்கும்படி அவர்களைக் காவலிட்டார். தான் குறிக்கப்போகிற சிலர் தவிர யாரும் அவ்விடம் நாடக்கூடாதென்றும், தன் உத்தரவுமீறி வருகிறவன் எவனாயிருந்தாலும் அவனை ஒரே வீச்சாய் வீசிப்போடவேணுமென்றும் கட்டளையிட்டு அந்த மாளிகை தம் குமாரத்தி சந்திரமுகிக்காக என்று மண்டலேச்சுவரர் சொன்னார். சந்திரமுகி இருபது தோழிமார்களுடனும் வேலைக்காரிகளுடனும் அவ்விடம் வாசம் செய்யவேண்டியதென்றும் அவளுக்குவேண்டிய சாமக்கிரியைகள் எல்லாம் தாம் அங்கு கொண்டுவந்து கொடுப்பதாகவும் ஏழாம் மாடியைவிட்டு ஓரடி கீழிறங்கினால் தன் குமாரத்தியாயிருந்தபோதிலும் அவளை வெட்டிவிட வேண்டுமென்றும் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார். தண்ணீர்க்குழாய்கள் முதலிய சுகத்துக்குவேண்டிய எல்லாம் மேல்மாடியில் வைத்தார். மீந்த நாலுமாடிகளுக்கும் அரியவீரர்களைக் காவலிட்டார். வேலைக்காரிகளுள் முக்கியம் செல்லம் என்றொருத்தி. அவள், மண்டலேச்சுவரர், பட்டமகிஷி, தூக்குத் தூக்கி ஆகிய இந்த நால்வரும் தவிர வேறு ஒருவரும் அந்த மாளிகைப் படிகளில் ஏறவாவது இறங்கவாவது கூடாதென்றும் தூக்குத் தூக்கிமட்டில் நினைத்த வேளையில் போகலாம் என்றும் சொல்லி, அன்று இரவே பத்துநாழிகைக்குள் சந்திரமுகியை அவளுடைய பரிவாரங்களுடன் ஏழாம் மாடியில் கொண்டுவந்து வைத்துவிட்டு தன் அரண்மனைக்குச் சென்றார்.

"இப்படியெல்லாம் நடந்ததற்கு என்ன காரணம்? ஒருநாளில் மாளிகை கட்டி இவ்வாறு என்னைச் சிறையில் வைத்தாற்போல்வைத்தது ஏன்? பகலெல்லாம் என்னைவிட்டுப் பிரியாமல் காத்து இரவு பத்துநாழிகைக்கே இவ்விடம்கொண்டு வந்து சிறைப்படுத்திப்போனதையும் போர்வீரர்களுக்கு என்னை ஒருபடி இறங்கக்கண்டால்கூட தலையை வீசிவிடக் கட்டளையிட்டதையும் யோசித்துப்பார்த்தால் நாம் ராமச்சந்திரனிடம் பேசின சங்கதி தெரிந்து விட்டாற்போல் காண்கிறது; இல்லாவிடில் இவ்வளவு நிர்ப்பந்தம் இதுவரையிலில்லாமல் இன்று மட்டில் விதித்தது என்ன காரணம். நாம் ராமச்சந்திரனிடம்பேசும்பொழுது நாலுபக்கமும் பார்த்துப் பேசினோமே. 'பகல் பக்கம் பார், ராத்திரி அதுவும் போதாது' என்பது உண்மையாய்விட்டதே. நல்லது இந்த மூடத் தூக்குத் தூக்கிக்கு இவ்வளவு சுயேச்சை என்ன? அவன்மட்டில் நினைத்தவேளையில் ஏறி யிறங்க உத்தரவாமே; ஒருகால் இவனே நம்மை வஞ்சித்தானோ என்னமோ தெரியவில்லையே. ஆயினும் இவனைப் பரீக்ஷிப்போம்" என்று பலவாறு ராஜகுமாரத்தி யோசித்து மனம் குழம்பினவளாய் ஒன்றும் செய்யத் தோன்றாமல் தூக்கமும் பிடிக்காமல் தூக்குத் தூக்கியைப் பரீக்ஷிக்கத் தீர்மானித்தாள்.

அர்த்தராத்திரியாயினும் சந்திரமுகிக்குத் தூக்கம் என்பது வரவேயில்லை. தூக்குத் தூக்கி அவளுக்கு நேரிட்ட சங்கடத்துக்குத் தானும் துக்கப்படுவதுபோல

தலை தொங்கவிட்டு எதிரில் உட்கார்ந்திருந்தான். சந்திர முகி அவனைப் பரீக்ஷிக்க உத்தேசித்து, "அடா தூக்குத் தூக்கி, அந்த அலமாரியிலிருக்கும் முதல்பாட புஸ்தகத்தை எடுத்துவந்து பதிஞராவது பக்கம் படி பார்ப்போம்" என்முள். அது கேட்டதும் அவன் ஏக்கம் பிடித்தவன்போல அவளைச் சற்றுநேரம் உற்றுப் பார்த்து சரேல் என்று கிளம்பி அலமாரியிலிருந்து புஸ்தகத்தை எடுத்து படிப்பதற்குப் பதிலாக அந்தப் புஸ்தகத்தைக் துண்டு துண்டாய்க் கிழித்து அவற்றைத் தன் விரல்களில் இடுக்கிக்கொண்டு மோந்துபார்த்து ஹோ என்று அழத்தலைப்பட்டான். "ஒரு பணம் கொடுத்து அழச் சொன்ஞள், இரண்டு பணம் கொடுத்து ஓயச்சொன்ஞள்" என்னும் பழமொழிப்படி சந்திரமுகிக்கு அவன் அழுகையை நிறுத்த அதிக கஷ்டமுண்டாயிற்று. அழுகை ஓய்ந்ததும் நான் உன்னைப் படிக்கச்சொன்ஞல் புஸ்தகத்தைக் கிழித்து இந்தமாதிரி அழுததற்குக் காரணம் என்னவென்று சந்திரமுகி கேட்க, தூக்குத் தூக்கி பின் வருமாறு சொல்லத்தொடங்கிஞன் :—

"சந்திரமுகி, நான் அநாதையாய் வந்தது முதல் என்னை அன்புடன் எடுத்து வளர்த்தது நீயே. எனக்கு ஒன்றும் குறைவில்லாமல் இதுவரையில் நடத்திவந்ததும் நீயே. நீயோ வெகு பணக்காரி. மண்டலேச்சுவரன் மகள். என் படிப்புக்காக ஒரு உபாத்தியாயரை நியமிக்கமாத்திரம் உனக்குச் சரிப்படாமல் போய்விட்டது! நல்லது அது போஞல் போகட்டும்; உன்னை சரஸ்வதி

என்றால் தரும், அவ்வளவு படித்திருக்கிறாய். என் விஷயத்தில் இவ்வளவு கவலைகொண்ட நீ தினம் ஒரு நாழிகையாவது எனக்கும் கொஞ்சம் சொல்லி வைக்க லாகாதா? அதுவுமில்லை. எனக்கு எருமைக்கடாப்போல் இருபது வயதுக்கு மேலாச்சுது. என்ன படிப்பில்லா விட்டாலும் வெட்கம் ஒன்று பாதிக்கிறதே. எனக்குப் படிப்பு என்பதே தெரியாது என்று அறிந்திருக்க, இவ்வளவு பெண்பிள்ளைகள் மத்தியில் முதல்பாட புஸ்தகத்தை எடுத்து பதினோராவது பக்கம் புரட்டச் சொன்னாயே. எனக்கு ஹரிஓம் கூட தெரியாது என்பது நீ செம்மையாய் அறிவாயல்லவா? நீ என்னை அவமானப்படுத்தினபடியால் அந்தப் புஸ்தகத்தை நான் அப்படி துண்டித்து அழுதேன். என் முட்டாள்தனத்துக்கெல்லாம் காரணம் நீயே" என்று சொல்லி முடித்தான்.

இவன் உரப்பாய்ச் சொன்னதையெல்லாம் பாசாங்கு என்று எண்ணாமல் நிஜமென்று நம்பிய சந்திரமுகி இவன் அறிவீனனாய்த்தான் இருக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டாள். அன்றியும் இவ்வளவு பரமார்த்தன்பேரில் அவநம்பிக்கைப் பட்டது தன்பேரிலும் ஒரு பெரிய தப்பாகவும் எண்ணி, மாடிப்படிகள் ஏறவும் இறங்கவும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கும் இவனுடைய உதவி தனக்கு இருப்பதற்காக தனது குலதெய்வங்களை யெல்லாம் துதித்து இவனை ராமச்சந்திரனுக்குக் கடிதம் கொண்டுபோய் வர உப

யோசிக்க நினைத்தாள். நினைத்த தக்ஷணமே ஒரு காகிதம் எடுத்து அதில் தானிருக்கும் நிலைமையையும், நிஷ்காரணமாய்த் தன் தகப்பனார் சிறையிட்டதையும், ராமச்சந்திரர்பேரில் குறையா அன்பையும் எடுத்துக்காட்டி, கடைசியாய் அவர் ஆண்பிள்ளையாயிருக்கும் பக்ஷத்தில் எந்த உபாயமாவது செய்து தன்னை அந்தச் சிறையிலிருந்து நீக்கி வேறு தேசம் கொண்டுபோய் மணம்புரிய வேண்டுமென்றும், அவரே தனக்குக் கதி என்றும் எழுதி பிரிய பார்யை சந்திரமுகி என்று கையொப்பம் வைத்து கடிதத்தை ஒரு உறையில் போட்டு முத்திரை செய்து தூக்குத் தூக்கியிடம் கொடுத்தாள். கொடுத்துச் சொன்னதாவது: "மஹாராஜா நம்மை இப்படி இங்கு சிறையில் வைத்திருக்கிறார். நீ இந்தக் கடிதத்தைப் பகிரங்கமாய்க் கொண்டுபோனால் இதைப் போர் வீரர்கள் பார்த்தால் நமக்கு இந்த ஸ்திதிக்கும் ஹானி நேரிடுமாகையால் இதை நீ வெகு ஜாக்கிரதையாய்க் கொண்டுபோகவேணும்" என்றாள். "இவ்வளவு பயப்படத்தக்க சங்கதி எனக்குமாத்திரம் சொல்லக்கூடாதா?" என்று தூக்குத் தூக்கி கேட்க, அதற்கு அவள் "ஒன்றுமில்லை ஒரு கேள்விக் கடுதாசி அதிலிருக்கிறது. காலபலம் எனக்கு இப்பொழுது குறைவாகையால் உன்னை அவ்வளவு தூரம் எச்சரித்தேன். இப்பொழுது விடிய பத்து நாழிகைதானிருக்கும், தூங்கிவிட்டு அதிகாலமே எழுந்து காகிதம் கொண்டுபோய்க் கொடுத்து மறுவேலை பார்" என்று சொல்லி படுக்கச் சென்றாள். தூக்குத் தூக்கியும் சயனித்துக்கொண்டான்.

இப்பால் நமது ராமச்சந்திரனைப்பற்றி சற்று விசாரிப்போம்: தகப்பனார் ராத்திரி நாலுநாழிகைக் கெல்லாம் தண்ணீர்கூட பல்லில் இடாமல் மாளிகையைக் கட்டிவைத்துவிட்டு வீட்டுக்குப் போன சங்கதியையெல்லாம் கேட்டு "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்றபடி தன் தகப்பனாருக்குக்கூட இன்னாருக்கு என்று தெரியாமலிருந்தபோதிலும் தான் யூகித்துக் கொண்டு சந்திரமுகிக்காகவே யிருக்கலாம் என்றும் தான் செய்த காரியம் மகாராஜனுக்கு எப்படியோ எட்டிவிட்டதென்றும் நிச்சயித்து அதிகம் பயந்து பிராணனுக்கு நடுநடுங்கி சங்கதியைமட்டும் ஒருவரிடமும் சொல்லாமல் பள்ளிக்கும் போகாமல் வீட்டினுள்ளேயே அடைத்துக்கிடந்தான். இந்தச் சங்கதியைத் தகப்பனாரிடத்தில் சொல்லவேயில்லை. அது அவனிடத்தில் பெரிய புத்திசாலித்தனமே.

இப்படியிருக்க பொழுதுவிடிந்தது; சந்திரமுகியும் தூக்குத் தூக்கியும் அவரவர்கள் படுக்கையை விட்டு எழுந்திருந்தார்கள். இருவரும் ஏதோ கொஞ்சம் அற்ப ஆகாரம் செய்தவுடன் சந்திரமுகி தூக்குத் தூக்கியைக் கடிதத்தை எடுத்துக்கொண்டு ராமச்சந்திரனிடம் போகக் கட்டளையிட்டாள். தூக்குத் தூக்கியும் கடிதத்தை ஐந்து, ஆறு சின்ன சவுக்கங்களில் சுருட்டிக் கட்டினான். சந்திரமுகி இவன் செயலைப்பார்த்துச் சிரித்து, "போதும், முடிப்புகள். கடிதத்தினுடைய பத்திரத்துக்கு இவ்வளவு போதும், சீக்கிரம் எடுத்துப்போ" என்

ருள். உடனே மூட்டையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு ராமச்சந்திரனிடம் போகப் புறப்பட்டான்.

இந்தக் கடிதத்தை அப்படியே மண்டலேச்சுவரனிடம் தூக்குத் தூக்கி கொண்டுபோய்க் கொடுப்பான் என்பது இதைப் படிப்போர் எண்ணக்கூடிய விஷயமே. அப்படி அவன் செய்திருந்தால் கதை முடிந்துவிடும். ஆனால் தூக்குத் தூக்கியின் எண்ணங்கள் எல்லாம் வேறு. மண்டலேச்சுவரன் தன்னழகுநிமித்தம் சந்திரமுகியைத் தனக்குக் கொடுக்க உத்தேசித்திருப்பது அவனுக்கு நன்றாய்த் தெரியும். சந்திரமுகியும் ஜனங்களும் எவ்வளவு முட்டாள் என்று தன்னைப்பற்றி அபிப்பிராயப்பட் டிருந்தபோதிலும் என்றைக்காவது ஒரு தினத்தில் ராஜகுமாரத்தி தனக்குக் கிடைப்பாள் என்று எண்ணியிருந்தான். இப்படியெல்லாம் இருக்க ஒரு பெரிய இடையூறாக ராமச்சந்திரன் தலைப்படவே, நாம் இந்தச் சங்கதியை மகாராஜனிடம் சொல்லி ராஜகுமாரத்தியைப் பத்திரப்படுத்தினாலொழிய இவள் நமக்கு வாய்க்காதவள் என்று யோசித்து, உடனே சக்கரவர்த்தியிடம் சொல்லி சந்திரமுகியைப் பத்திரப்படுத்தினனேயொழிய வேறில்லை. செய்தபடியே காரியமும் கைகூடினது. இப்பொழுது எந்த ராமச்சந்திரனும் சந்திரமுகியை அசைக்கக்கூடாது. இப்படி இவளைப் பத்திரப்படுத்தியபிறகு தூக்குத் தூக்கியானவன் தானே ராமச்சந்திரனாயிருந்து அவளைக் கொண்டுபோக யோசித்தான். சொற்ப காலமாகிய ஐந்து, ஆறுநாளில்

அப்படி நல்ல வழியாய்ச் செய்வது கஷ்டமென்று தோன்றி தந்திரமாய்த் தன் செயலை முடிக்கக் கருதி யிருந்தான்.

தூக்குத் தூக்கி கடிதத்துடன் கீழே யிறங்கி உடனே ஒரு கடைக்குப் போய்க் காயிதம் பேனு மைக் கூடு வாங்கிக்கொண்டு ஒருவரும் தன்னைக் காணக் கூடாத சமீபத்திலிருந்த ஒரு காட்டுக்குப் போய் அவ் விடத்தில் சந்திரமுகி கடுதாசி உறையைத் திறந்து பார்த்தான். பார்த்து ராமச்சந்திரன் எழுதுவதுபோல சந்திரமுகிக்குக் கடிதம் எழுதத் தொடங்கினுன். கிரு ஷ்ணசிங்கு எப்போதும் சந்திரமுகியுடன் கலாசாலையி லிருந்தபடியால் ராமச்சந்திரன் எழுத்துப்போல் எழுத நன்ருய்த் தெரியும். ராமச்சந்திரன் எழுத்து மாத்திர மல்ல, அவ்விடத்திலுள்ள ஒவ்வொருவருடைய எழுத் துப்போலவும் தூக்குத் தூக்கிக்கு எழுதத் தெரியும். இவன் மகா புத்திமான் என்பதும் எழுதப் படிக்க செவ்வையாய் அறிந்தவன் என்பதும் முன்னமே சொல்லியிருக்கிறேம். ராமச்சந்திரன் எழுதுவதுபோல தூக்குத் தூக்கி எழுதியதாவது:—

“எனது பிரியபத்தினியே!

உன்தன் அன்புள்ள கடிதத்தைப் பார்த்துக் கண் குளிர்ந்தேன். உன் கடிதம் வரும் முன்னமே என் தகப்பனுர் மாளிகையைப் பற்றிச் சொல்லும்போது உனக்காகத்தான் இருக்குமென்று யூகித்துக்கொண் டேன். தேர்முட்டியில் நம்மிருவருக்கும் நடந்த சம்பா

ஷணை காற்றுமூலமாய் ராஜாவுக்கு எட்டியிருக்கவேண்டும்; ஆனால் இவைகளுக்கெல்லாம் நான் பின்வாங்குகிறவனல்ல. பதினுலாவது மாடியில்தான் கொண்டு போய் வைக்கட்டுமே. நான் எப்படியாவது உன்னை இன்று ஆறும்நாள் இரவு கொண்டுபோய்விடுகிறேன். நீமட்டும் இவன் மூலமாய் எனக்கு ஆகவேண்டியது கொடுத்தனுப்பிவா. மடையனுனாலும் இவன் உதவி தான் நமக்கு வெகு முக்கியம். ஆகையால் இவன் நமக்குக் கிடைத்திருப்பதற்காக நமது குலதெய்வங்களைப் பிரார்த்திக்கவேண்டும். இவன்மூலமாய் லக்ஷம் வராகன் அனுப்பு. காரணம் பின்னுல் எழுதுகிறேன்.

உன் தன் பிராணநாதன்,

ராமச்சந்திரன்.''

முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் சாமர்த்தியமுள்ள தூக்குத் தூக்கி இந்தமாதிரி கடிதத்தைக் கொஞ்சமேனும் பயமில்லாமலும் ராமச்சந்திரன் கையெழுத்துப்போலும் எழுதி, முன்போலவே உறைக்குள் போட்டு முத்திரையிட்டு, சவுக்கங்களில் கட்டி முடிச்சிட்டு கக்கத்தில் எடுத்துக்கொண்டு வெகு வேகமாய்ச் சந்திரமுகியண்டை வந்தான். அவளைக் கண்டதும் புன்சிரிப்புடன், "எஜமான் நீ அனுப்பிய காகிதத்தை எத்தனைதரம் முத்தமிட்டார்! கேள்விக்கடிதம் பாதி தேய்ந்துபோயிருக்கலாம் என்று தோன்றுகின்றது" என்று சொல்லிக்கொண்டே சந்திரமுகிக்கு

ஆவலையுண்டாக்கினுனே யல்லாமல் கடிதத்தை எடுக்கக் கூடவில்லை. அப்புறம் அவள் வருந்திக் கேட்டதின் பேரில் "இதோ" என்று முடிச்சை ஒவ்வொன்ருய் அவிழ்த்துக் கொடுத்தான். கடிதத்தைப் பார்த்தவுடன் ராமச்சந்திரன் செய்தது பொய்யும் சந்திரமுகி செய்தது மெய்யுமாய்விட்டது. ஆயிரம்தடவை முத்தமிட்டுக் கொண்டாள் என்ருலும் அவள் வாஸ்தவமாய் செய்ததற்கு நூற்றிலொரு பங்குகூட ஆகாது. இந்தமாதிரியாகக் கடிதத்தைக் கண்டு களித்ததை ஒருவரிடமும் சொல்லாமலிருக்க தூக்குத் தூக்கியை அவள் பிரார்த்தித்தாள். அவன் "எஜமானரும் இந்தமாதிரி வெறுமனே என்னிடம் அவநம்பிக்கைப் படுகிருர். நீயும் அப்படியே அவநம்பிக்கைப் படுகிருய்; நான் என்ன அவ்வளவு மூடனு?" என்ருன். சந்திரமுகி நாம் ஏதாவது சொன்னுல் இவன் கோபிக்கிருன். இவன் மனது கோணினுல் நமக்குக் காரியம் கோணிப்போமாகையால் நாம் இவனிடத்தில் நம்பிக்கையின்பேரில் வேலை வாங்கவேணுமென்று நிச்சயித்து, அதுமுதல் எல்லாம் நம்பிக்கையின்பேரிலேயே விட்டுவிட்டாள். தூக்குத் தூக்கியை தன் கஜானுவுக்கு அழைத்துபோய் "இதிலிருந்து உன்னுல் எவ்வளவு பணம் கொண்டுபோய் எஜமானிடத்தில் கொடுக்கலாமோ அவ்வளவு கொண்டு போகவேணும்" என்று சொன்னுள். தனக்காகவே எல்லாம் செய்வதாகையால் அரைக்கணத்தில் லக்ஷம் வராகனுக்கு மேலேயே தூக்குத் தூக்கி அவ்விடமிரு

ந்து கீழே கொண்டுபோய், தான் வழக்கமாய் பக்ஷணம் வாங்கித் தின்னும் ஒரு கிழ அம்மையார்வீட்டில் அறை ஒன்று குடிக்கூலிக்கு வாங்கி அவ்விடம் பணத்தை வைத்துப் பூட்டினன். பிறகு மாறுவேஷம் பூண்டு குதிரைவிற்கும் அரபிபோல் உடுப்பு மாற்றிக்கொண்டு அந்தப் பட்டணத்தில் குதிரைவிற்கிற இடமெல்லாம் போய்க் குதிரைகளைத் தேடிக்கொண்டிருந்தான். இவன் செய்கிற பரீக்ஷையானது அங்கு இருந்த தேர்ந்த குதிரை வியாபாரிகள் எல்லாரும் ஆச்சரியப்படத்தக்க தாக இருந்தது. கடைசியாய் இரண்டு நல்ல குதிரைகள் 50,000 வராகனுக்கு வாங்கினன். உச்சைசிரவம் என் ருல் அந்த அசுவ ரத்நங்களுக்கே தகும். 20,000 வரா கன் அவைகளுக்குச் சேணம் அலங்காரம் முதலியவை களில் செலவுசெய்து நாலு ஐந்து நாளைக்காக இரண்டு பறையர் குதிரைக்காரர்களையும் திட்டம் செய்தான். மீதிப் பணத்துக்கு ஒரு நல்ல நூலேணியும் வாள் ஒன் றும் வாங்கிக்கொண்டு சந்திரமுகிக்கு ராமச்சந்திரன் எழுதுவதுபோல எழுதியதாவது :—

" எனது பிரியபத்தினீ !

தூக்குத் தூக்கி என்ன முட்டாள் என்று நீ சொன் ஞலும் நான்மாத்திரம் சந்தேகிக்க வேண்டியதாயிருக் கிறது. அவ்வளவு கட்டுக்காவல்களை எல்லாம் கடந்து எப்படியோ பணத்தைப் பத்திரமாய்க் கொண்டுவந்து விட்டான். நல்ல குதிரைகள் வாயுவேக மனோவேக

மாய் ஓடப்பட்டவைகள் இரண்டு நான் வாங்கியிருக்கிறேன். இவைகளுக்காக வராகன் 50,000 கொடுத்தேன். நீ பார்க்கும்படி உன்னுடைய ஏழாம் மாடி பெரிய ஜன்னலுக்கு நேராக கீழ் ராஜவீதியில் ஞாயிற்றுக்கிழமை சாயுங்காலம் கட்டி வைக்கிறேன். தூக்குத் தூக்கியிடம் ஓர் அற்புதமான வாளும் நூலேணியும் அனுப்பியிருக்கிறேன்; இந்த வாள் வெகு அனுகூலமுள்ளது. அதிக கடிமையான இரும்பையும் கைநொடிப்பொழுதில் அறுக்கும். இதற்குமட்டும் 25,000 வராகன் கொடுத்தேன். ஞாயிற்றுக்கிழமை இரவு பத்து நாழிகைக்குமேல் எழுந்து எல்லாரும் குறட்டைவிட்டுத் தூங்கும் சமயம் பார்த்து பெரிய ஜன்னலை இந்த வாளால் ஒரு நொடிப்பொழுதில் அறுத்து அங்கிருந்து நூலேணியை விசிறினையானால் நான் கீழேயிருந்து பற்றிக்கொள்ளுகிறேன். நீ சுகமாய் பயப்படாமல் இறங்கிவா; நாமிருவரும் ஓடிப்போகலாம். ஞாயிற்றுக்கிழமைக்கு முந்தி இதே தூக்குத் தூக்கியிடம் எவ்வளவு பணம் அனுப்பக்கூடுமோ அவ்வளவும் அனுப்பு.

அன்புள்ள உன்தன்,

ராமச்சந்திரன்"

என்றிவ்வாறு கடிதத்தை எழுதி முத்திரையிட்டு சவுக்கத்தில் கட்டி முடிந்து மறைத்து மற்றொரு சவுக்கத்தில் நூலேணியையும் வாளையும் சுருட்டி எடுத்துக்கொண்டு நிமிஷந்தோறும் சிரித்தவளை சந்திரமுகியிடம்

தூக்குத் தூக்கி வந்து சேர்ந்தான். தூரவரும்பொழுதே இவன் சிரிப்பைக்கண்டு சந்திரமுகி நடுநடுங்கி கைச் சாடையாலும் கண்சாடையாலும் முகச்செய்கையாலும் எச்சரித்துப் பார்த்தாள். இவன் கேட்கிறதாகத் தோற் றவில்லை. ஏனெனில் சமீபத்தில் கவனிக்கப்பட்டவர் கள் ஒருவரும் இல்லை என்பது தூக்குத் தூக்கிக்கு நன் ருய்த் தெரியும். கிட்ட வந்தவுடன் "அடா முட்டாள், இனி இந்தமாதிரி சிரியாதே" என்ருள். "நான் என்ன செய்யட்டும் குதிரைகள் அவ்வளவு அழகாய் இருக் கின்றனவே" என்ருன். "என்ன குதிரைகள்" என்று சந்திரமுகி வினவ, "நம்ம எஜமான் இப்பொழுது வாங்கியிருக்கும் குதிரைகளின் கால் விலை பெருது" என்று சொல்லிக்கொண்டே நூலேணி வாள் இருக் கும் மூட்டையைச் சந்திரமுகி முன்னே வைத்தான். அவள் மூட்டையை அவிழ்த்து நூலேணியையும் வாளை யும் கண்டு திடுக்கிட்டு மேஜை அறையில் ஒளித்து வைத்துக் கடிதத்தைக் கேட்க, அதைக் கொடாமலே குதிரையையே வர்ணிக்கத் தலைப்பட்டான். சந்திரமு கிக்குக் கோபம் வந்து "இனி வாயைத் திறவாதே, கடி தத்தைக் கொடு" என்ருள். அவ்வளவு ஆவல் உண் டாக்கி பிறகு முடிச்சுகளை அவிழ்த்துக் கடிதத்தை தூக் குத் தூக்கி கொடுத்தான். கடிதத்தைப் பார்த்து கண் குளிர்ந்து தன்னுடைய பாக்கியமே பாக்கியமென்றும் இவ்வளவு காலத்துக்குள் இவ்வளவு ஏற்பாடு செய்த ராமச்சந்திரன் சாதாரணன் அல்லவென்றும், ஓடிப்

போவதற்கு வாள் நூலேணிகள் தன்னிடத்திலும் குதிரைகள் ராமச்சந்திரன் வசத்திலும் இருப்பதால் எல்லாம் சித்தமாய் இருப்பதாகவும், ஓடிப்போய் அன்னியதேசத்தில் சுகமாய்க் காலங்கழிக்கப் பணம்மட்டும் தேவை என்றும் நினைத்து, உடனே தூக்குத் தூக்கியை தன் கஜானாவுக்கு அழைத்துப்போய் அங்கிருந்து எவ்வளவு அவனால் கொண்டுபோகலாமோ அவ்வளவும் ராமச்சந்திரனிடம் சேர்க்கச் சொன்னதுடன் முழுமையும் கொண்டுபோய்ச் சேர்த்தாலும் தனக்குச் சம்மதம் தான் என்றும் சொன்னாள். தனக்கு இரண்டு சந்தேகம் தீர்த்தால் ஒழிய ஒன்றும் செய்யமாட்டேனென்று தூக்குத் தூக்கி சொன்னான். அவை யாவை என்று சந்திரமுகி கேட்க, தூக்குத் தூக்கி "குதிரைகள் எதுக்கு? இரண்டாவது கஜானாவை ஏன் இப்படி வெறுமையாக்க வேணும்?" என்று கேட்டான். அதற்குச் சந்திரமுகி சமீபத்தில் ஒரு காளிகோவிலிருப்பதாகவும் அவ்விடம் போவதற்குக் குதிரைகள் என்றும், அந்தக் காட்டுத் தெய்வத்துக்குப் பூசையிட செலவுக்காகப் பணம் என்றும், அவன் இரண்டு கேள்விகளுக்கும் மறுமொழி சொன்னாள். அவ்விடத்தில் தன்னையும் அழைத்துப் போக தூக்குத் தூக்கி கேட்க, சந்திரமுகி மூன்று பேராய் போகக்கூடாதாகையால் அவ்விடத்தில் நைவேத்தியம் செய்கிற எல்லா பதார்த்தங்களும் விசேஷமாய்க் கொண்டுவந்து கொடுப்பதாகவும் சொன்னாள். மனம் கசிந்தவன்போல் காண்பித்து கஜானாவிலிருந்து

LIBRARY

பணங்களையெல்லாம் கீழே கொண்டுபோய் உண்டிக ளாக மாற்றி சேணங்களிலேயே லேசாய் மறைத்து விட்டான்.

பிரயாணத்துக்கு எல்லாம் சித்தமாய்விட்டது. சவாரிக்குக் குதிரைகளும், அன்னியதேசத்தில் செல விட பணமும், இந்த சங்கதிகளைக்குறித்து ராஜகுமா ரத்திக்கு முந்தியே எச்சரிப்பும் எல்லாம் சித்தமாய் விட்டது. தன்னுடைய அருமையான ராமச்சந்திரனே எல்லாம் செய்வதாக சந்திரமுகி எண்ணி எண்ணி மனம் பூரித்துக்கொண்டுவந்தாள். இந்தச் சங்கதிகளில் சிறி தேனும் அவனுக்குத் தெரியுமா? ஐயோ அவன் ஒரு பாவமும் அறியாதவனாகத் தின்பதும் உறங்குவதுமாக மகாராஜனிடத்திலிருந்து தன் தகப்பனாரான மந்திரிக் குக் கடிதம் வரும்பொழுதெல்லாம் தன் தலைக்கு எங்கு ஆபத்து வருகிறதோ என்று பயந்தவனாக வீட்டை விட்டு வெளியே புறப்படாமல் பதுங்கிக்கொண்டிருந் தான். நல்லது, மண்டலேச்சுவரனுக்குத்தான் ஏதா வது தெரியுமா? தன் குமாரத்தியின் சம்ரக்ஷணைக்காக ஒரு பகலில் கட்டிமுடித்த மாளிகைக்குள்ளேயே நடக் கும் அநியாயம் சக்கிராதிபதி அறிவாரா? ஒன்று மறிய மாட்டார். எல்லாம் சரியாய் இருக்கிறதென்றெண்ணி அவரும் நிர்விசாரமாயிருக்கிறார். ஆனால் யாருக்குத் தான் விசாரம்? சந்திரமுகிக்குமட்டுமே. ஒரு நிமிஷம் ஒரு வருஷமாய் அவளுக்குத் தோன்றிற்று. நிமிஷ நிமி ஷமாய் எண்ணிவந்து ஞாயிற்றுக்கிழமை வந்தவுடன்

தன் ஜன்மம் அன்றுதான் சபலமானதாக நினைத்தாள். அன்று, தான் போகும்முன் நல்ல ஆடை ஆபரணங்களைக் கொண்டுபோக உத்தேசித்து அப்பொழுது தூக்குத் தூக்கி யிருந்தால் சந்தேகிப்பான் என்றுலோசித்து அவனை எப்படியாவது வேலையிட்டு, தாங்களிருவரும் ஓடிப்போவதை அறியாமலிருக்கும்படி செய்யவேணும் என்று ராமச்சந்திரனுக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுத்துத் தூக்குத் தூக்கியை அங்கு போகும்படி அனுப்பி விட்டாள். ஈஸ்வர சங்கற்பத்தால் என்னை எப்படியாவது போகும்படி செய்தாளே மகராஜி என்று மனதில் சந்தோஷமிருந்தபோதிலும் வெளியில் போவதற்கு மனம் வராதவன்போல் கொஞ்சநேரம் காட்டி, சந்திரமுகி கண்டிப்பாய்ச் சொல்லவே, கடிதத்தை எடுத்துக் கொண்டு தூக்குத் தூக்கி கீழே இறங்கினான். "இன்று மட்டும் நம்மை வெளியிலனுப்பாவிட்டால் நாம் செய்த காரியங்கள் எல்லாம் வியர்த்தமாகவல்லவோ முடிந்திருக்கும். நம்மை அனுப்பினாளோ, பிழைத்தோமோ" என்று எண்ணிக்கொண்டே கீழே இறங்கி கடிதத்தைப் படித்துப்பார்த்து கிழித்தெறிந்துவிட்டு அன்று பகலெல்லாம் நீண்ட பிரயாணத்துக்காக குதிரைகள் சித்தஞ்செய்து தானும் சித்தமானவனாய் சாயுங்காலமானவுடன் குதிரைக்காரர்களுக்குக் கூலியும் வெகுமதியும் கொடுத்தனுப்பிவிட்டு தானே குதிரைக்காரன் வேஷம் பூண்டு கீழ் ராஜவீதியில் சந்திரமுகி மாளிகை பெரிய ஜன்னலுக்கெதிரே ஒரு பூவரசமரத்

தில் குதிரைகளைக் கட்டி அவைகளின்கீழ் தானும் இளைப்பாறப் படுத்தான். படுத்ததுதான் தெரியும். கும்பகர்ணன்போல் குறட்டைவிட்டுத் தூங்க ஆரம்பித்தான். ஒரு வாரமாக ஆகாரம் நித்திரை செவ்வையாய் இல்லாதபடியால் களைத்து அந்தமாதிரி அயர்ந்து போக நேரிட்டது. சந்திரமுகி ஆடை ஆபரணங்களை ஒரு சின்னப் பையிலும் பெட்டியிலும் எடுத்து வைத்துவிட்டு வேணுமென்ற ஆபரணங்களைத் தன்மேல் போட்டுக்கொண்டு சாயுங்காலமானவுடன் ஜன்னல்வழியே குதிரைகளைப் பார்த்து மனங்களித்து ராத்திரி பத்து நாழிகையாகப் பார்த்திருந்தாள்.

இது இப்படியிருக்க தாராபுரத்து ஏகசக்கிராதிபதி ஏதோ ஒரு காரணத்தால் அப்புக்காத்தான் என்னும் ஒரு பெரிய கள்ளத்தலைவனை ஏதோ ஒரு சமயத்தில் விரோதித்துக்கொண் டிருந்தார். அப்புக்காத்தான் அவரை சிக்ஷைபண்ண நினைத்து அன்று ஞாயிற்றுக் கிழமை இரவு அந்த ஊரைத் தன் கூட்டாளிகளைக் கொண்டு கொள்ளையிட உத்தேசித்து அந்த ஊர் அறுபத்துநாலு தெருக்களுக்கும் அறுபத்துநாலு கள்ளத் தலைவர்களையும் ஒவ்வொரு தலைவனுக்கு இருபது முப்பது கள்ளர்களையும் அனுப்பி ஒவ்வொரு வீட்டிலும் அணுவளவும் விடாமல் கொள்ளையடிக்கக் கட்டளையிட் டிருந்தான். அப்புக்காத்தான் உத்தரவுப்படியே அன்று கீழ் ராஜவீதிக்கும் ஒரு கள்ளத்தலைவனும் இருபது கள்ளர்களும் போனார்கள். அவ்விடத்தில் பூவரசமரத்

தில் கட்டப்பட்டிருந்த இரண்டு குதிரைகளையும் அவைகள்மேலிருந்த விலையுயர்ந்த சேணங்கள் அலங்காரங்களையும் கண்டு இவைகளின்பேரில் ஏறப்பட்டவர்கள் லக்ஷாதிபதிகளாகவே யிருக்கவேணுமாகையால் அவர்களைக் கொள்ளையிட்டு குதிரைகளையும் சொத்தையும் கொண்டுவர ஒரு கள்ளனை அவ்விடம் உட்காரவைத்துப் போனான். ஒரு குதிரையை கையில் அவிழ்த்துப் பிடித்துக்கொண்டு பிரபு வரும் சமயம் எதிர்பார்த்தவனாக கள்ளன் உட்கார்ந்திருந்தான்.

பொழுது அஸ்தமித்து பத்துநாழிகை ஆய்விட்டது. ராஜகுமாரத்தி காலமேயே பிரயாணத்துக்குச் சன்னத்தமாய்விட்டாள். பத்துநாழிகைக்கெல்லாம் எல்லாரையும் நித்திரை சோதித்தாள். ஒவ்வொருவரும் மெய்மறந்து தூங்கக் கண்டு ஈசுவரன்கூட தன் மனதொத்திருப்பதாய் நிச்சயித்துக் குலதெய்வங்களை யெல்லாம் மனதால் தியானித்து வாளை யெடுத்து ஜன்னலில் வைக்கவே ஜன்னல் இரண்டு துண்டாய்விட்டது. அங்கிருந்து நூலேணியை விசிறினாள்; குதிரை கால்முளையில் அந்த நூலேணி தற்செயலாய் வந்து மாட்டிக்கொண்டது. இழுத்துப்பார்த்து கெட்டியாயிருக்கக் கண்டு ராமச்சந்திரனே பிடித்திருப்பதாய் மனங்களித்துப் பெட்டியையும் மூட்டையையும் ஒரு கையில் எடுத்துக்கொண்டு இறங்க ஆரம்பித்தாள். ஆபரணங்கள் அக்கினிபோல் ஜ்வலிக்கிறதும் நிசிவேளையில் அவள் இறங்குவதும் திருடன் மனதில் சுறுக்கென்றது. "ஆகா

இறங்கும் உருவம் ஒரு பெண்போல் காணப்படுகிறது. நிசிவேளையில் ஸ்திரீகள் இறங்குவார்களா? இவ்வளவு உயரத்திலிருந்து எப்படித்தான் இறங்க மனதுவரும்! இது ஏதோ பேயோ பிசாசோ தெரியவில்லை, நம்மையே நோக்கி வருவதைப் பார்த்தால் நம்மைத்தான் இன்று தீனிக்கு லக்ஷியம் வைத்திருக்கிறதோ என்னவோ தெரியவில்லை என்று கள்ளன் ஆலோசிக்கும் பொழுதே, சந்திரமுகி வெகு சமீபம் வந்துவிட்டாள். வெகு சமீபம் வரக்காணவே, இனி நாமிருந்தால் பிராணுபாயந்தான் என்று யோசித்து மற்றொரு குதிரை எப்படியாவது போகட்டுமென்றெண்ணி அந்தக் குதிரையின்மேலேறி தெற்குமுகமாய்த் திரும்பி ஓட ஆரம்பித்தான். திருடன் ஓடினதைச் சந்திரமுகி பார்த்து ராமச்சந்திரன்தான் ஒருகால் நாமிருவரும் சந்திக்கும்பொழுது ஏதாவது பேச நேரிடும்; அப்படிப் பேசுங்கால் யாராவது கண்டு பிடித்துக்கொண்டால் என்னசெய்கிறது என்று ஓடினாற்போல் தோற்றுகிறது என்று எண்ணிக்கொண்டே கீழே இறங்கி மற்றொரு குதிரையை அவிழ்த்து ஏறிக்கொண்டு சீக்கிரமாய் முன்பு ஓடும் குதிரையைப் பிடிக்கத் தானும் தன் குதிரையைத் துரத்தினாள்.

சந்திரமுகி கொஞ்சம் திரும்பிப்போனதும் தாதி செல்லம் விழித்துக்கொண்டு பக்கத்தில் படுத்திருந்த ராஜகுமாரத்தியைக் காணுமல் கூச்சலிடாமலே அவ்விடமாடிமுடியத் தேடியும் இல்லாமலிருக்கவே ஜன்னலும்

அறுத்திருக்கக் கண்டு திடுக்கிட்டு நாமினி இங்கிருந்தால் மண்டலேச்சுவரன் கோபத்துக்கு இரையாக வேணுமேயல்லாமல் வேறில்லை. சந்திரமுகி போனவழி நாமும் போய் மஹாராஜன் கோபத்துக்குத் தப்பித்துக் கொள்வதுடன் கூடுமானால் சந்திரமுகியையும் தேடிப் பார்ப்போம் என்று யோசித்து, வாளைக் கையில் எடுத்துக்கொண்டே நூலேணியில் இறங்கி இரவு முழுதுமாவது தாங்களிருவரும் போய்விட்டதை ஒருவரும் அறுமானிக்காமலிருப்பதற்கு ஜன்னலைச் சரியேவைத்துக் கீழே இறங்கினாள். நூலேணியைக்கூட தான் ஓடும்பொழுது ராஜகுமாரத்தி மறந்துவிட்டபடியால் செல்லம் தப்பிக்க அது ஒரு வழியாகவிருந்தது. மற்றவர்களும் அதை அநுசரிக்காமலிருக்கும்படி செல்லம் நூலேணியைத் துண்டு துண்டாய் அறுத்துவிட்டு சம்பத்தை முறித்து ஒரு கிணற்றில் போட்டு குதிரைகள் போன சுவட்டைப் பார்த்துக்கொண்டே குடல்தெறிக்க ஓடினாள். அவளும் ஓட ஆரம்பித்தபிறகுதான் தூக்குத் தூக்கியும் நித்திரை தெளிந்து கண்விழித்துப் பார்த்தான்; குதிரைகளைக் காணோம். யாரோ பெண்பிள்ளைகள் வந்துபோனது இவனுக்குச் சொப்பனம் கண்டாற்போல் தோன்றிற்று. எல்லாவற்றுக்கும் தைரியலக்ஷ்மியைக் கைவிடாமல் பின்வருமாறு தேற்றிக்கொண்டான்.

“தெய்வத்தின் கதி விசித்திரம் என்பது சத்யமே. எனக்கும் கொஞ்சம் நல்லகாலமிருந்தபடியால் ஆண்டவர் எனக்கு நித்திரையை அனுப்பினார். நான்

மட்டும் விழித்துக்கொண் டிருந்திருப்பேனேயானால் என் காரியங்கள் எல்லாம் வியர்த்தமாய்ப் போயிருக்கும்; சந்திரமுகி கீழே இறங்கினவுடன் நான்தான் இந்தமாதிரி ராமச்சந்திரன்போல மோசம் செய்தேன் என்று உண்மையைச் சொல்லுவதைவிட எனக்கு வேறு யோசனை ஒன்றும் தோன்றாது. அதைக் கேட்டவுடன் நான் செய்த வஞ்சனைக்கு அவள் என்னை அவ்விடத்திலேயே கொலை செய்துவிட்டு அதே நூலேணி வழியாய்த் திரும்பிப் போயிருக்கலாம், அல்லது வேறு எந்தவிதமாயாவது சிக்ஷித்திருக்கலாம்; ஏதோ தற்செயலாய்த் தூங்கிவிட்டோம். ஸ்திரீ யாரோ போனதாக சொப்பனம் கண்டாற்போல் தோன்றுகிறது. ராஜகுமாரத்தி இந்த வழி அகத்தியம் போயிருக்கவேணும், கூட யாரிருந்தாலும் சரி, நாம் வெகு சீக்கிரமாய் குதிரைவேகத்துக்குச் சரியாய் ஓடி ராஜகுமாரத்தியைக் கண்டுபிடித்து நைவேத்தியங்கள் கேட்போம்" என்றாலோசித்து ஓடினான். முதல் குதிரையில் போகிற கள்ளனுக்கும் சந்திரமுகிக்கும் ஒரு நாழிகை வழி தூரம், சந்திரமுகிக்கும் செல்லத்துக்கும் ஒரு நாழிகை வழிதூரம், செல்லத்துக்கும் தூக்குத் தூக்கிக்கும் ஒரு நாழிகை வழிதூரம்; இப்படியே ஒவ்வொருவரும் இரவு முடிய தலைதெறிக்க ஓடினார்கள். திருடனுக்குப் பேயோ பூதமோ தன்னை துரத்துவதாக எண்ணமிருந்தபடியால் அவன் வேகமாய்த் தப்பித்துக்கொள்ள ஓடினான். சந்திரமுகிக்கு முன்போகிற மந்திரிகுமா

ரனைப் பிடிக்க வாஞ்சை அதிகமாயிருந்தபடியால் அவ ளும் கூடல் தெறிக்க ஓடினாள். செல்லம் தூக்குத் தூக்கி இருவர்களும் தனித்தனியே 'சந்திரமுகியைப் பார்க்க ஓடினார்கள்.

இரவெல்லாம் ஓடிக் கழிந்தது. அருணோதய காலமாகவே, எல்லாரும் ஒரு மரமடர்ந்த காட்டின் மத்தியிலிருப்பதாகத் தனித்தனியே அறிந்துகொண் டார்கள். பக்ஷிகள் சப்தித்துக் கிழக்கும் நன்றாய் வெளுக்கவே தூரத்திலிருந்தே முந்திப்போகும் மந் திரிகுமாரனைப் பார்க்க ஆவலுடன் குதிரையை ரத் தம் புறப்படும்படி விலாக்களில் குத்தி ஏறக்குறைய கள்ளனைப் பிடித்துவிட்டாள். முந்தி போகும் ஆளைக் கண்டதும் ராமச்சந்திரனல்ல வேறு யாரோ தெரிய வில்லை என்று திடுக்கிட்டு மனங்குழம்பி ஒன்றும் செய் யத் தோன்றாதவளாய்க் கடைசியாய் உயிர் வெல்லமா கையால் நாமிப்படிக் குழம்பினால் அந்த ஆளே நம் மைக் கொல்லுவானே; அப்படி அவன் செய்யும்முன் னம் நாமே அவனைக் கொல்லவேணும்" என்றெண்ணி கத்தியை உருவி முந்திப்போகும் கள்ளனை ஓரேவீச் சாய் வீசி இரண்டு துண்டமாக்கி குதிரையைக் கைப்பற் றிக்கொண்டாள். கள்ளனும் ஏதோ பேயோ பிசாசோ என்று திடுக்கிட்டிருந்தபடியால் ராஜ குமாரத்தி பிழைத்தாள். குதிரையைக் கைப்பற்றிக்கொண்டதும் ஒன்றும் தோன்றாமல் ஒரு மரத்தடியே கையின்மேல் தலையைத் தாங்கிக்கொண்டு புலம்பத் தலைப்பட்டாள்.

"ஐயோ, என் அருமை நாதா, பிராணநாதா! உம்மை இந்தக் கள்ளன் எங்கு கொன்று குதிரையைக் கைப்பற்றிக்கொண்டானோ தெரியவில்லையே. இவ்வளவு துக்கங்களுக்கா பாவி நான் பெண்பிறந்தேன். கள்ளனைத்தான் கொன்றுவிட்டேன், புலி கரடிகள் இந்தக் காட்டில் என்னை இன்னும் அரைநாழிகைக் கெல்லாம் துரத்துமே. நானப்பொழுது என்செய் வேன், இவ்வளவு துக்கத்துக்காகவோ என்னைப் படைத்தாய் ஈஸ்வரா? இனி நான் அடிபெயர்த்துவைக்கிற தில்லை, இவ்விடத்திலேயே பிராணனை விட்டுவிடுகிறது" என்று கண்ணுங் கண்ணீருமாக இருக்கும்பொழுதே, குடல் தெறிக்க தாதி செல்லம் எதிரில் ஓடிவரக் கண்டாள். அவள் சந்தோஷம் என்னமாயிருக்குமென்று யோசித்துக்கொள்ளலாம். எதிர்கொண்டோடி அவளை வாரி அணைத்துக்கொண்டாள். அவளும் சந்திரமுகியைக் கண்டவுடன் ஆனந்தபாஷ்பம் சொரிந்தாள்."

"இப்படி நீ மோசம் செய்யலாமா?" என்று தாதி செல்லம் கேட்க, "எல்லாம் என் தலையெழுத்து" என்று நடந்த சங்கதியைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தாள். பிறகு நாமிருவரும் இனி ஊருக்குத் திரும்பினால் அதைவிட அவமானம் வேறொன்றும் வேண்டாம்; ஆகையால் வேறெங்கேயாவது போய்ப் பிழைப்போம். என்று பேசிக்கொண்டிருக்கும்பொழுது "பலகாரம் வாழைப்பழம்" என்று சொல்லிக் கொண்டே தூக்குத் தூக்கியும் வந்து சேர்ந்தான்; அவ

னைக் கண்டவுடன் அவர்களிருவர்களுக்கும் காணாது கண்டாற்போல் அளவற்ற சந்தோஷமுண்டாயிற்று. என்ன முட்டாளாயிருந்தபோதிலும் புருஷனாகையால் அந்தக் கஷ்டதசையில் அவனையாவது ஈஸ்வரன் அனுப்பினாரே என்று ஆனந்தபாஷ்பம் சொரிந்தார்கள். இன்னும் காளிகோவிலுக்கும் போகவில்லை; போய் வேண்டியது தருகிறோம் என்று சொல்லி அவனைத் தேற்றினார்கள். இவனுடைய முட்டாள்தனத்திற்கு ஒருபக்கம் சிரிப்பும், தாங்களிருக்கும் கஷ்டதசைக்கு அளவற்ற துக்கமும், தயவுசெய்து தூக்குத் தூக்கியையாவது ஈசன் அனுப்பினாரே என்று கொஞ்சம் ஆறுதலும் அவர்களிருவருக்கும் இருந்தது. கடைசியாய் வேறுதேசம் போய் பிழைப்பதே கௌரவம் என்றெண்ணி செல்லத்தை மற்றொரு குதிரையின்பேரில் ஏறச்சொல்லி தூக்குத் தூக்கியை குதிரைகளுக்கு முன்னே வழிகாட்டிக்கொண்டு ஓடச்சொன்னார்கள்.

"ஆறெல்லாம் பாலானாலும், நாய் நக்கித்தான் குடிக்கவேணும்" என்பதையும் "தந்தம் விதியின் பயனே பயன்" என்பதையும் நினைத்துக்கொண்டு, "எத்தனையோநாள் சிரமப்பட்டு நல்ல குதிரைகள் பொறுக்கியும் அவைகளின்முன் நாம் ஓடத்தான் ஈசன் எழுதினானேயல்லாமல் வேறு எழுதக்காணோமே" என்றெண்ணி, இருக்கட்டும் "யானைக்கொருகாலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வராதா" என்று தேற்றிக்கொண்டு குதிரைகள் முன் ஓடினான்.

இப்படியே பகல் பதினைந்து நாழிகைவரையில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள். முகத்தில் நகையிருந்தால் வாயில் அன்னமாமா? ஒரு கவளம் அன்னத்துக்குக்கூட வழியில்லை; ராத்திரியெல்லாம் நித்திரையில்லாமலும் பகல் பதினைந்து நாழிகைவரை யில் ஒரேபடியாய் சவாரிசெய்யவே எல்லோருக்கும் இளைப்பு மேலிட்டுவிட்டது. பெண்பிள்ளைகளாகையால் விசேஷமாய் தாதிக்கும் சந்திரமுகிக்கும் இளைப்பு உண்டாயிருந்தது. ஒரு கூடாரம்போல் நிழலடர்ந்த ஓர் ஆலமரத்தின்கீழ் சந்திரமுகியும் தாதியும் இறங்கி "இனி எங்களால் எடுத்தடிவைக்க முடியாதாகையால், நீ என்ன கிடைத்தாலும் கிடைக்காவிடினும் உன் மேல்துணியை நனைத்தாவது துளி தீர்த்தம் வாயில் விட்டால் ஒழிய எங்கள் பிராணன் நீடித்து நிற்கமாட் டாது" எனவே, தூக்குத் தூக்கி அப்படியே ஆகட்டு மென்று குதிரைகளை மரத்து விழுதில் கட்டிவிட்டு அவர்களையும் நல்ல இடத்தில் உட்காரவைத்து தண் ணீர் தேட ஆரம்பித்தான். நாலுபக்கமும் ஓடிப் பார்த் தான். சலம் அருணாசலம்தான்; ஒரு துளிகூடக் காணப்படவில்லை. ஐயோ! இவ்வளவு கஷ்டங்களை யெல்லாம் வென்றும் சலமில்லாமல் மாண்டுபோக நேரிட்டதே; ஆயினும் கூடியமட்டும் பார்ப்போம் என்று ஆலோசித்து கண்ணுக்கெட்டினமட்டும் கிழ க்குநோக்கிப் பார்த்தான். சலத்துக்கு ஏதோ ஆதாரம் இருப்பதுபோல பக்ஷி முதலானவைகள் பறந்துபோவ

தைக் கண்டு களிப்புற்று தானும் ஓடினான். இவன் எண்ணினபடியே ஒரு பெரும் குளத்தையும் கண்டான்; ஆனால் ஆச்சரியம்! ஆச்சரியம்! குளம் முடிய ரத்தமாயிருந்தது; ஐயோ! "கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற்போல" நாம் ஏதோ உத்தேசித்து வந்து ஏதோ கண்டோமே, ரத்தக்குளம் இதுவரையில் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை. ஓடின ஓட்டம் நா வறண்டு போயிருக்கிறது; என்ன ஆனாலும் சரி என்று எண்ணிக்கொண்டு ஒரு கை தண்ணீர் எடுத்து வாய்க்கு சமீபம் கொண்டுபோனான்; வாய்க்குச் சமீபம் கையைக் கொண்டுவரவே தண்ணீர் காடையிறகுபோலக் கறுப்பாயும் கண்ணுக்கு வெகு நன்றாயுமிருந்தது; ஆகா இதென்ன ஆச்சரியம், இந்த சலம் கையில் எடுத்தால் சுத்தசலமாயும் குளத்திலிருக்கும்பொழுது ரத்தசலமாயுமிருக்கிறது, இதற்கு ஏதாவது காரணமிருக்கவேண்டும். குளத்தைச் சுற்றி வருவோம் என்று நினைத்து அந்தக் குளத்தைச் சுற்றிப்போகையில், அதற்கு வடபாரிசத்தில் யானைக்கண் அளவுள்ள ஒரு பிரகாசமான ரத்தினம் புதைத்திருக்கக் கண்டான். ஜ்வலிக்கிற அக்கினிபோலும் உதித்த சூரியன்போலும் தகதகவென்று ரத்தினம் பிரகாசிக்கக் கண்டு, இதுதான் இந்தக் குளத்துக்கு ரத்தவர்ணம் கொடுத்திருக்கவேண்டுமென்று நிச்சயித்து, அதைத் தன்னிரு கைகளினால் பற்றவே குளத்து ஜலம் தனது சுபாவ வர்ணம் பொருந்தியிருக்கக் கண்டான். எப்படியிருந்தாலும் சரி, இந்த

இரத்தினத்தைக்கொண்டுபோகவேண்டுமென்று நிச்சயித்து, அதை பூமியிலிருந்து பெயர்த்து தன் மேல் துணியைக் கிழித்து, அதில் நன்றாய்ச் சுற்றி இடுப்பில் உள்பக்கம் பத்திரமாய் ஒருவரும் காணாதபடி வைத்துக் கொண்டான். தாமரை இலைகளில் நீர் கட்டிக்கொண்டு ஓட்டமாய் வந்து சந்திரமுகிக்கும், தாதி செல்லத்துக்கும் கொடுத்தான். அவர்கள் அதி திருப்தியுடன் தீர்த்தத்தை உட்கொண்டு மரத்தின் நிழலில் அரைநாழிகை படுத்திருந்தார்கள்.

அஸ்தமிக்கப் பத்து நாழிகைக்கெல்லாம் மறுபடி பிரயாணம் செய்ய ஆரம்பித்து கொஞ்சம் தூரம் அந்தக் காட்டுவழியே சென்று, பிறகு ஏதோ நற்காலத்தால் நல்ல பாதையைக் கண்டுபிடித்தார்கள். பாதை தென்பட்டதும் இது எவ்விடம் போகிற வழி என்று தூக்குத் தூக்கி பிரயாணிகளைக் கேட்க, அவர்கள் சமீபத்தில் ஐந்து 'ஆறு நாழிகை வழியிலிருக்கும் புஷ்பபுரம் போகிற ரஸ்தா என்றார்கள். புஷ்பபுரம் என்ற பெயர் காதில் விழவே, தூக்குத் தூக்கிக்குப் போன உயிர் திரும்பி வந்தாற்போலாயிற்று.' இருட்டும் முன் இவர்களை நமது ஊர் கொண்டுபோய்ச் சேர்ப்போம் என்று யோசித்து வேக வேகமாய்க் குதிரைகளை நடத்தினான்.. சூரியாஸ்தமன காலமானபடியால் மாடுகள் காட்டிலிருந்து வீட்டுக்குக் கன்றுகளைக் காண ஆவலுடன் திரும்பி வந்துகொண்டிருந்தன. வேதியர்கள் சாயுங்கால சந்தியை முடிப்பதற்கு ஆறுகளி

லும் தடாகங்களிலும் இறங்கிக்கொண்டிருந்தார்கள்; அதேசமயத்தில் தூக்குத் தூக்கியும் புஷ்பபுரம் வந்து சேர்ந்தான். அவ்விடத்தில் ஒரு சாவடியில் குதிரைகளுடன் சந்திரமுகியையும் செல்லத்தையும் உட்கார வைத்து தான்மட்டில் ஊரில் போய் வீடுபார்த்து வருவதாகச் சொல்லிப் போனன்.

ஊரில் சென்று ராஜவீதியில் மூன்றுமாடியுள்ள வீடு ஒன்று குடிக்கூலிக்கு அமர்த்தித் திறவுகோலை வாங்கிக்கொண்டு சந்திரமுகியும் தாதியும் உட்கார்ந்திருக்கும் சாவடி வந்து அவர்களை அந்த வீட்டுக்கு அழைத்துப் போய்விட்டான். காலத்துக்குத் தகுந்த புத்தியும் தூக்குத் தூக்கிக்கு வந்திருப்பதாகக் கண்டு அவர்கள் மனங்களித்தார்கள். சமையல் செய்ய கையில் ஒன்றும் இல்லாமலிருந்தபடியாலும் எல்லாம் வாங்கித் தான் ஆகவேணுமாகையாலும் சந்திரமுகி தன் பசி ஆற்றக் கூடவில்லை என்று சொல்ல, கோவிலிலிருந்து ராத்திரிகாலம் கழிய தூக்குத் தூக்கி சென்று சில பலகாரங்கள் வாங்கிவந்தான். அவைகளில் கொஞ்சம் மூன்றுபேர்களும் புசித்து சிரமம் மேலிட்டபடியால் சந்திரமுகியும் செல்லமும் படுத்தார்கள்.

தூக்குத் தூக்கிக்குமட்டும் தூக்கம் போயேவிட்டது. தன்னுடைய சொந்த ஊரில் அவர்களை அன்று இரவே கொண்டுவந்து சேர்த்த ஆனந்தம் ஒன்றே அவனுக்கு மேலிட்டிருந்தது. மூன்றும்மாடியில் பெண்பிள்ளைகளை விட்டுவிட்டுக் கீழேவந்து முதல்மாடியில்

குதிரைகளைக் கட்டி சேணங்களைக் கழற்றி வைத்து அவைகளில் தான் வைத்திருந்த உண்டிகளையெல்லாம் எடுத்து ஒரு அறையில் வைத்துப் பூட்டி கையில் ஒரு உண்டியை எடுத்துக்கொண்டு கடைக்குப் போய் அதை மாற்றி தாங்கள் மூன்றுபேரும் சுகமாயிருப் பதற்கு வேண்டிய பாத்திரங்கள் சாமான்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு அன்றிரவே வீடு சேர்ந்து படுத்துக் கொண்டான். ஆனால் வேண்டுமென்றே அரிசியும் நெய்யும் வாங்கிவரவில்லை.

“அற்பாகாரம் அற்ப நித்திரை” ஆகையால் சந்திரமுகியும் தாதியும் கோழி கூவு முன்னமே எழுந் திருந்தார்கள். பாத்திரங்களிலும் சாமான்களிலும் கண்விழித்தது கண்டு ஆச்சரியப்பட்டு தூக்கித் தூக்கி யைக் கூப்பிட்டு வினவவே, அவன் “நீங்கள் அதிக பசியுடனே இரவு படுத்ததைக் கண்டு நீங்களிருவரும் தூங்கினபிறகு நான் கடைக்குப் போய் இவைகள் வா ங்கி வைத்தேன்” என்றான். நல்லது, “அரிசி நெய் எங்கே” என்று அவர்கள் கேட்க, “ஐயோ! அவை களைமாத்திரம் மறந்துவிட்டேனே” என்று கையை விரித்தான். அவர்கள் “இவன் சமர்த்தன், ‘கலியா ணத்தில் தாலிகட்ட மறந்தாற்போ லிருக்கிறது.’ முக் கியமாய் என்னவேண்டுமோ அவைகளை மறந்து வந் தான்” என்று கொல்லென்று சிரித்தார்கள். பிறகு மறு படி ஞாபகம்வந்து போகிறவன்போல கடைக்கோடி அரிசியும் நெய்யும் வாங்கிவந்தான். அன்றுமுதல்

தூக்குத் தூக்கிக்கு வீட்டுக்கு வேண்டிய சலம் அண்டாக்களில் நிரப்ப வேண்டுமென்றும் பற்றுப் பாத்திரங்களைத் தேய்த்துவைக்கவேண்டு மென்றும் கடைக்குப் போய்க் குறித்த சாமான்களை வாங்கிவர வேண்டுமென்றும் சந்திரமுகி கட்டளையிட்டாள். தாதி செல்லத்துக்குத் துணிகளை அழுக்குப் போக்குவதும் சமையல் முதலானவை செய்கிறதும் வேலை என்று சொன்னாள். இந்தப்பிரகாரம் அன்றுமுதல் சாதாரண ஜனங்கள் போல அவர்கள் மூன்றுபேர்களும் அந்த ஊரில் வாசஞ்செய்துகொண்டு வந்தார்கள்.

அன்றைத்தினம் தூக்குத் தூக்கி குதிரைகளுக்கு இரண்டு பறையர்களை நியமித்தான். முதல்மாடி முடிய குதிரைகளுக்கும் குதிரைக்காரருக்கும் விட்டுவிட்டான். அந்தக் குதிரைகளுக்குச் சற்றேறக்குறைய சரியாக இன்னும் இரண்டு குதிரைகளும் ஒரு பெரிய குதிரைவண்டியும் வாங்கி புதிதாய் வாங்கின குதிரைகளுக்கும் இரண்டு குதிரைக்காரர்களை நியமித்தான். விலையுயர்ந்த ஆடை ஆபரணங்கள் சித்தமாய் வாங்கிவைத்தான். கீழ்மாடியில் நடக்கிறது ஒன்றும் மேல்மாடியிலிருக்கும் பெண்பிள்ளைகளுக்குத் தெரியாது. தூக்குத் தூக்கி பொழுது விடிந்ததும் படுக்கையை விட்டு எழுந்து ஸ்நானம்செய்து அண்டாக்களில் தேவையானசலம் நிரப்பி பாத்திரங்களை யெல்லாம் சுத்திசெய்து கடைக்குச் சென்று வேண்டுமென்கிற சாமான்களை வாங்கிக் கொடுப்பான். ஒவ்வொருநாள் முக்கியமான சாமான்களை

வீடுவந்தவுடன் நினைத்துக்கொண்டாற்போல் அபிநயித்து ஓடிப்போய் வாங்கிவருவான். பிறகு மறுபடி ஸ்நானம்செய்து அவர்களுடன் கூட உட்கார்ந்து போஜனம் செய்து கீழே இறங்குவான். இவைகள்தாம் பெண் பிள்ளைகளுக்குத் தெரியும்; அப்புறம் கீழே நடப்பது இன்னது என்பது அவர்களுக்குத் தெரியாது. கீழே இறங்கினஉடன் தன்பரிசாரகஉடுப்பைக்கழற்றிவைத்துவிட்டு ராஜ ஆடை ஆபரணங்கள் அணிந்துகொண்டு குதிரை வண்டியில் நான்கு குதிரைகளையும் கட்டித் தெருத்தெருவாய்ப் பட்டணத்தை வளைய வருவான். அப்பொழுது அவன் வண்டியையும், வேலைக்காரர்களையும், ஆடை ஆபரணங்களையும், முக்கியமாய் அவன் அழகையும் பார்க்கிறவர்கள் இவன் எந்தஊர் ராஜாவோ அல்லது ஜமீன்தாரோ என்றெண்ணும்படியாயிருக்கும். சாயுங்காலம்வரையில் இந்தமாதிரி ஊர் சுற்றிவிட்டு அஸ்தமிக்கும்பொழுது வீடுவந்து திருட்டுவழியாய் ஓசைப்படாமல் குதிரைகளையும் வண்டியையும் முதல் மாடியில் விட்டுப் பறையர்களைக் குதிரைகளைப்பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுத் தன் அறையில் வந்து ஆடை ஆபரணங்களைக் கழற்றிவைத்து கரிவேஷ்டியுடன் மூன்றும்மாடி போய் பெண்பிள்ளைகள் இட்ட வேலை செய்துகொண்டிருப்பான். இந்தமாதிரி வெகுநாள் தூக்குத் தூக்கியான கிருஷ்ணசிங்கு செய்துகொண்டு வந்தான்.

நல்லது, சந்திரமுகி ஓடிப்போனபிறகு மண்டலாதிபர் என்னசெய்தார்'சற்று விசாரிப்போம். சந்திர

முகியும் செல்லமும் இல்லாமலிருக்கக்கண்டு திடுக்கிட்டு மற்ற வேலைக்காரிகள் போர்வீரர்கள் மூலமாய் ஒரு கடிதம் எழுதி சக்கரவர்த்திக்குத் தெரிவிக்கவே அவர், அவ்விடம் வந்து பார்த்து இவ்வளவு ஜனங்கள் கண்ணிலும் தெரியாமல் எப்படி ஓடிப்போய்விட்டார்கள் என்று ஒரு பக்கம் ஆச்சரியமும், தன் ஒரே அருமையான மகள் போய்விட்டதற்கு அடக்கக்கூடாத துக்கமும், மகள் ஓடிவிட்டாள் என்றால் எல்லாரும் கை கொட்டிச் சிரிப்பார்கள் ஆகையால் நடந்தது நடந்துவிட்டது, இனி என்ன நடக்கப்போகிறதோ அதை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தால்தான் மானமே ஒழிய வேறல்லவென்று ஒருபக்கம் வெட்கமும் கொண்டு சமாசாரத்தை வேலைக்காரருக்குள்ளேயே அடக்கி, இந்த சங்கதி வேறு யாருக்காவது தெரிந்தால் அவ்விடமிருக்கும் வேலைக்காரிகள் யாவரையும் கண்ணைப் பிடுங்கி விடுவதாகவும், சந்திரமுகி இருந்தால் எப்படியோ அப்படியே அவள் இல்லாதகாலத்திலும் அவர்கள் அபிநயித்து நடந்துவரவேண்டுமென்றும், தான் தன் தூதர்களை அந்நிய தேசங்களுக்கனுப்பி அவள் போயிருக்கும் இடத்தை சீக்கிரம் கண்டுபிடிப்பதாகவும் சொல்லி சங்கதியை மறைத்துவிட்டார். சந்திரமுகி ஓடிப்போய்விட்டது மண்டலேச்சுவரன், பட்டமகிஷி, வேலைக்காரிகளைத் தவிர மற்று ஒரு பிராணிக்கும் தெரியமாட்டாது. போர்வீரர்கள் அவள் அங்கு இருப்பதுபோலவே காவல் காத்துவந்தார்கள்; சாமான்

கள் எல்லாம் ராஜகுமாரத்திக்கு எப்படிப் போகவேணுமோ அப்படியே போய்க்கொண்டுவந்தன. ராமச்சந்திரன் ஊரிலிருக்கிறானா இல்லையா என்பதை மகாராஜன் தூதர்களால் அறிந்துகொண்டு அவனிடம் கோபமில்லாமல் தூக்குத் தூக்கியும் கூடப் போயிருப்பதால் தன் குமாரத்திக்கு யாதொரு குறைவு மிருக்காது என்று ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு, தனக்கு வந்திருக்கும் மனக்குறை உள்ளத்தில் குடிகொண்டிருந்தபோதிலும் வெளியில் காட்டாமல் நடந்து கொண்டுவந்தார்.

இப்படியே மூன்று நான்கு மாதங்கள் சென்றன. புஷ்பபுரத்தில் தூக்குத் தூக்கியின் ஆதரவாலேயே சந்திரமுகியும் செல்லமும் சுகமாய் வாழ்ந்துகொண்டு வந்தார்கள். தூக்குத் தூக்கி ஒருநாள் புஷ்பபுரம் அரசனைப் போய்ப் பார்க்க யோசித்து வெறுங்கையாய் ராஜதரிசனத்துக்குப் போகக்கூடாதாகையால் தான் புஷ்பபுரத்துக்கு வரும்பொழுது காட்டில் கண்டெடுத்த ரத்நத்தை சுவர்ண தாம்பாளத்தில் வைத்து மகமல்போட்டுக் கட்டி கையில் எடுத்துக்கொண்டு விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை மேல்போட்டுக்கொண்டு வண்டியை அரண்மனைக்குப் போகவிட்டான். இவன் வரும் ஒரு டாம்பீகத்தையும் மேல்தரித்திருந்த உடுப்புகளையும் நகைகளையும் பார்த்தபேர்கள் எல்லாம் இவன் எந்த ஊர் அரசனோ மந்திரியோ, என்றெண்ணினார்கள். அரண்மனை வந்தவுடன் அரசனும் அப்படியே

எண்ணி முன்கொண்டு அழைத்துவந்து சம ஆசனம் கொடுத்தான். உட்கார்ந்தவுடன் தூக்குத் தூக்கி கொடுத்த வெகுமதியைப் பார்க்கவே இவனும் ஒரு அரசனுகத்தா னிருக்கவேண்டு மென்பது அரசனுக்குச் செம்மையாய்த் தோன்றிற்று. "என்னிடம் ஒரு ரத்தினம் இதுபோலிருக்கிறது. அதற்கு ஜோடி சேர்க்க இதுவரையில் தேடியும் அகப்படாமல் இன்றுதான் தங்களிடம் பெற்றேன்" என்று அரசன் சொல்ல, தூக்குத் தூக்கி, "தங்களிடமிருக்கும் ரத்தினத்தைவிட இது வெகு உயர்ந்ததாக இருக்கும். இதற்குச் சமமானது இந்த உலகத்தில் கிடையாது" என்று சொல்ல, அரசனுக்குத் தன் ரத்தினம்தான் உயர்ந்ததென்று கோபம் வந்துவிட்டது. உன் ரத்தினம் உயர்ந்தது என் ரத்தினம் உயர்ந்தது என்று இவர்கள் சண்டைபோட ஆரம்பித்தார்கள். பிறகு இப்படி வீண் வாய்ச்சண்டையால் பிரயோசனமில்லை இரண்டு ரத்தினங்களையும் பந்தயம் கட்டிப் பரீக்ஷித்துப் பார்ப்போம். யார் ரத்தினம் பந்தயம் ஜெயிக்கிறதோ அவர் ரத்தினமே உயர்ந்த ரத்தினம் என்று தீர்மானித்து பந்தயம் கட்டிக்கொண்டார்கள். அரசன் தான் பந்தயம் இழந்தால் ராஜ்யத்தைத் தூக்குத் தூக்கிக்கு விட்டுவிட்டு பதினான்கு வருஷம் அடிமைப்படுவதாகச் சொன்னார். தூக்குத் தூக்கி தானும் ராஜகுமாரன்போல் அபிநயித்து அப்பொழுது தன் ராஜ்யத்தை விட்டு வெகு தூரமிருந்தபடியால் அதற்குப் பதிலாக இருபத்தெட்டு

வருஷம் அடிமைப்படுவதாகச் சொன்னான். பந்தயம் நிஷ்கரிஷித்தாய்விட்டது. முதல்தர ரத்தின வியா பாரிகளும் பாடம் பார்க்கப்பட்டவர்களும் வந்து இர ண்டு ரத்தினங்களையும் பரீக்ஷிக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவிதத்திலும் தூக்குத் தூக்கியின் ரத்தின மே உயர்ந்ததாக இருந்தது. அரசன் சொல்லுக்குக் கட்டுபட்டவனானகையால் ராஜ்யத்தையும் தன்னையும் ஒப்புக்கொள்ள தூக்குத் தூக்கியிடம் சொன்னான்.

தூக்குத் தூக்கி படபடப்பாய் ஒரு காரியமும் செய்யப்பட்டவனல்ல; ஒவ்வொன்றையும் நன்றாய் யோசித்துச் செய்யப்பட்டவன். இப்பொழுது நாம் நமக்கு வந்திருக்கும் பதவியைக் கண்டு குதிக்கக்கூடா தென்று எண்ணி அரசனிடம் சொன்னதாவது: "சுவாமி நான் வெகு சின்னவன்; இவ்வளவு சிறு வயதில் ஏதோ நல்ல அதிர்ஷ்டத்தால் இந்த ராஜ்யம் கிடைத்தது. இவ்வளவு பாரம் வகிக்க என்னால் ஆகாதாகையால் நான் சொல்லுவதைச் சற்று செவி கொடுத்துக் கேட்கவேணும். எப்படியெனில், தாங் கள் முன்போலவே ராஜாவாக இருக்கவேணும்; நான் தங்களுக்குப் பிரதிநிதியாக இருந்துகொண்டு சகல காரியங்களையும் நடத்திவருகிறேன். உத்தரவுகளுக் கும் கடிதங்களுக்கும் கையொப்பம் தாங்களே போட்டு தாங்கள் நேராக அனுப்புவதுபோல இருக்கவேணும்; ஆனால் செய்யும் வேலையெல்லாம் நானே செய்கிறேன்" என்று சொல்லி முடித்தான்.

அரசனுக்குப் போன பிராணன் திரும்பி வந்தாற் போலாயிற்று. கிரீடத்தை இழந்து பதினொன்கு வருஷம் அடிமையா யிருக்கவேண்டியிருக்க, தனக்கு மறுபடியும் ராஜபதவியையும் தேசத்தையும் கொடுத்துத் தனக்குப் பிரதிநிதியாய் தூக்குத் தூக்கி இருப்பதாகச் சொல்லவே, அரசனுக்கு வந்த ஆனந்தத்தைக் கேட்க வேணுமா, அவருக்கு ஆண்பிள்ளை கிடையாதாகையால் ஒருகால் அந்தப் பாக்கியத்தை இவன்ரூபமாய் ஈசன் அனுப்பினரோ என்று அவர் நினைக்கவேண்டியிருந்தது. அவர் தூக்குத் தூக்கியாகிய கிருஷ்ண சிங்குபேரில் அதிக சந்தோஷப்பட்டு அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டு அவன் குலம் கோத்திரத்தை விசாரிக்க, அதற்கு கிருஷ்ணசிங்கு "எல்லாம் நான் சமயத்தில் சொல்லுகிறேன்; இப்பொழுது என்னை மன்னிக்கவேணும்" என்றான். அவர் இதுவும் ஒரு ஆச்சரியம் என்று சும்மாயிருந்துவிட்டார்.

அந்தக்ஷணம்முதல் ராஜப்பிரதிநிதி வேலையை ஒப்புக்கொண்டு கையெழுத்துப்போடுகிற ஒன்றைத்தவிர மற்ற எல்லா ராஜகாரியங்களையும் நடத்திவந்தான். அன்று சாயுங்காலம் வீட்டுக்குப் புறப்படும்பொழுது வாத்தியங்கள், துருப்புகள் முதலான விருதுகளெல்லாம் முன்னேபோகப் புறப்பட்டன. உடனே அவர்களையெல்லாம் தூக்குத் தூக்கியாகிய கிருஷ்ணசிங்கு கூப்பிட்டு இந்த டாம்பீகமெல்லாம் தனக்கு ஒன்றும் வேண்டாமென்றும், தான் சாதாரண மனுஷன்போல வீடு

போய்த் திரும்பிவர அபிப்பிராயப்பட்டிருப்பதால் தன்னுடன் கூட ஒருவரும் வரக்கூடாதென்றும் சொல்லி, தன் சொல் மீறிநடந்த பெயர்களைக் கண்ணைப் பிடுங்கி விடுவதாகக் கட்டளையிட்டான். இவைகளையெல்லாம் கண்டு மந்திரி முதலானவர்கள் வியப்புற்று இதுவும் ஒரு ஆச்சரியமென்று இருந்துவிட்டார்கள். கிருஷ்ணசிங்கு அன்றுமுதல் வீட்டில் முன்போல் காலமேயும் ராத்திரியும் சந்திரமுகி இட்ட வேலையைச் செய்துகொண்டும், பகல்முடிய ராஜ்யபாரம் வகித்தவனாயும் இருந்துகொண்டிருந்தான். ராஜநீதிகளைச் செம்மையாய்ப் படித்திருந்தவனுகையாலே ஜனங்களுக்கு அனேக நன்மைகளைத் தினந்தோறும் செய்துவந்தான். எல்லோரும் இவனை தர்மராஜா என்று சொல்லத் தொடங்கினார்கள். எல்லா முக்கிய மந்திரிகளும் கிருஷ்ணசிங்கின் புத்தியை மெச்சினார்கள். இவர் குலம் கோத்திரம் ஒன்றும் தெரியவில்லை. யாரோ! எவரோ! இவர் காலமே வருமிடமும் தெரிகிறதில்லை சாயந்திரம் போகுமிடமும் தெரிகிறதில்லை. ராஜ்ய பரிபாலனம் வெகு செம்மையாய்ச் செய்கிறார். எப்படியாவது இவர் வீட்டைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று ஆசைகொண்டு தெருவுக்கு ஒரு தூதனை அனுப்பி சின்ன ராஜா வண்டி போகும் இடத்தை ஒற்றுப்பார்த்து வரச்சொன்னார்கள்.

கிருஷ்ணசிங்கு குடிஇருந்த தெருவுக்கும் ஒரு மந்திரி வந்து, வண்டி நுழையும் வீட்டைப் பார்த்து, இது

தான் சின்ன ராஜா வீடு என்றறிந்துகொண்டான். அப்போது மூன்றும்மாடியில் சந்திரமுகி எண்ணெ யிட்டுக்கொண்டிருந்தாள். அவள் தலைமயிர் வெகு நீள மாயிருந்ததை அவிழ்த்துவிட்டு ஒவ்வொன்றுக்கும் தா து செல்லம் தைலம் தடவிக்கொண்டிருந்தாள். இதையெல்லாம் கண்டு அங்கே இருப்பது சின்ன ராஜா வின் சம்சாரம் என்றும் அவ்வளவு அழகான கேசங் கள் இவளுக்கு இருந்தபடியால் அதிக சௌந்தரியமுள் ளவளாய் இருக்கவேண்டுமென்றும் நிச்சயித்து, உட னே எல்லா சங்கதியையும் தூதனாய் வந்த மந்திரி மற்ற மந்திரிகளிடத்திலும் பெரிய அரசனிடத்திலும் சொன் னான். அவ்வளவு சிலாக்கியமான ரூபவதியை நாம் ஒரு தடவை பார்க்கவேணுமே, நாம் பார்க்காவிடில் ஈஸ் வரன் கண்கள் கொடுத்ததற்கு என்னபலன் என்று யோசித்துப் பின்வருமாறு நிச்சயித்தார்கள். அந்த ஊரில் பாழடைந்த காளிகோவில் ஒன்றுண்டு: அவ் விடத்தில் வருஷம் ஒருதடவை வாடிக்கையாய் ஊஞ்சல் உற்சவம் ஒன்று நடப்பதுபோலும், அப் பொழுது ஒவ்வொருவரும் தன் சம்சாரசகிதம் வந்து ஊஞ்சல் ஆடிப் போகவேணுமென்றும் ஒரு தஸ்த வேஜ ஏற்படுத்தி, பெரிய அரசனைக் கையொப்பம் வைக் கச் சொல் பழைய தஸ்தவேஜுகள் மத்தியில் வைத் துவிட்டார்கள். ஏதோ அனேக சந்தர்ப்பங்களால் பத்து பதினைந்து வருஷம் நின்றுபோயிருந்த ஊஞ் சல் உற்சவத்தை அந்த வருஷமுதல் சின்ன ராஜா

வானவர் நடத்தவேண்டுமென்றும் அவரிடம் தெரிவித்தார்கள். சின்ன ராஜாவான கிருஷ்ணசிங்கு தான் ராஜ்யபரிபாலனம் பண்ண ஆரம்பிக்கும்பொழுது புழைய கட்டுகள் ஒவ்வொன்றையும் பார்த்திருந்தும் அந்தமாதிரியான பதிவு ஒன்றிலும் இல்லாதிருந்தபடியால், இது மந்திரிகள் செய்த சூது என்றும், சந்திரமுகியை மாடியில் என்றையதினமாவது பார்த்திருக்க வேண்டுமென்றும் நினைத்து, நல்லது அவளை நம்முடைய பத்தினியாக ஏற்படுத்திக்கொள்ள இது ஒரு நல்ல சமயமென்று ஊஞ்சல் உற்சவத்துக்காக என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளுக்குக் கட்டளையிட்டுவிட்டார். உற்சவ நாள்வரையில் பழைய மாதிரியாகவே சின்ன ராஜாவான கிருஷ்ணசிங்கு நடந்து வந்தார்.

உற்சவதினம் வந்துவிட்டது. அன்றுகூட கிருஷ்ணசிங்கு காலமே ஸ்நானம் செய்து அண்டாக்களில் ஜலம் நிரப்பி இன்னும் மற்றக் காரியங்களும் செய்து சாப்பாட்டை முடித்துக்கொண்டு பத்துநாழிகைக்கெல்லாம் அரண்மனைக்கு வந்துவிட்டார். சாயுங்காலந்தான் ஊஞ்சலுக்கு முகூர்த்தம் வைத்திருந்தது. அன்று பகல் பதினைந்து நாழிகைக்கு சந்திரமுகியானவள் தாதி செல்லத்தினிடம் பின்வருமாறு துக்கப்பட்டாள்: "ஐயோ! ராமச்சந்திரனை நம்பி நான் வீணாய்க் கெட்டுப்போனேனே, ஊரைவிட்டுப் புறப்பட்டு ஏறக்குறைய ஒரு வருஷகாலமாயிற்று. அவ்விடத்தில் எவ்வ

ளவோ நல்ல ஸ்திதியிலிருந்து இங்கு சாதாரண மனுஷர்போல நாமிருக்கிறோமே ; இந்த கஷ்டகாலம் எப்பொழுது நீங்குமோ தெரியவில்லையே. மண்டலேச்சுவருடைய குமாரத்தியாகிய எனக்கு இப்படிப்பட்ட கஷ்டதசை வந்ததே. என் தகப்பனாருக்கு நான் ஒரே பெண்ணாச்சுதே ! அவர்கள் நான் போனபிறகு என்ன வானார்களோ தெரியவில்லையே ! நல்லகாலமிருந்து இவ்விடம் நம்மைத் தேடிவந்து அழைத்துப்போகலாகாதா ? நான் இருக்குமிடமிருந்தால் கலியாணஞ் செய்துகொள்ள எத்தனையோ ராஜகுமாரர்கள் என்னை நாடி வருவார்களே. கொஞ்சம் அவசரப்பட்டு 'யானை தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக்கொள்வதுபோல, நானே என்னைக் கெடுத்துக்கொண்டேன்" என்றிவ்வாறு புலம்பித் துக்கத்தால் சோர்ந்தவளாய் களைத்து விழுந்தாள். பகல் பதினைந்து நாழிகை வேளை வெயிலும் இவளுக்குண்டான களைப்பும் கொஞ்சம் நித்திரையை உண்டாக்கின.

அப்பொழுதுதான் அரண்மனையிலிருந்து காளிகோவில் போக எல்லோரும் புறப்பட்டார்கள். சின்ன ராஜாவான கிருஷ்ணசிங்கு அன்றுமுதல் தனக்குமுன் விருதுகள் போகலாம் எனவே, அவர்முன் அனேக வாத்தியங்களும் போர்வீரர்களும் சென்றார்கள். ராஜ வீதியில் வரும்பொழுது தாதி செல்லம் ஒருநாளும் அந்தத் தெருவில் கேளாத ராஜவாத்தியங்களைக் கேட்டுத் திடுக்கிட்டு மண்டலேச்சுவரர்தாம் தாங்களிருக்கு

மிடம் கண்டுபிடித்து வந்தார்களோ என்று நடுநடுங்கி சந்திரமுகியை எழுப்பினாள். எழுப்பி அவளிடம் சங்க தியைச் சொல்லிக்கொண்டிருக்கையில்தானே வாத்தி யங்களெல்லாம் தங்கள் வீட்டு வாசலிலேயே வந்து நின்றன. இவைகளையெல்லாம் கண்டு அவர்கள் பயம் அதிகமாயிற்று; தகப்பனார் வரவை சந்தோஷத் துடன் எதிர்பார்த்தவளாயினும் குற்றவாளியாகையால் சந்திரமுகி மனம் பதைத்தது. இதற்குள் தாதி செல்லம் கீழே ஓடிப்போய் பார்த்து மறுபடியும் வேகமாய் வந்து வாசலில் இறங்கினவன் தூக்குத் தூக்கி என் றாள். செல்லம் சொல்வதைக் கேட்டவுடன் இவளுக்கு ஏதோ மதிமயக்கம் என்றெண்ணி தானே கீழே யிறங்கினாள்.

இதற்குள் சின்னராஜாவான கிருஷ்ணசிங்கும் மேலே போய்க்கொண்டிருந்தார். சந்திரமுகியும் கிரு ஷ்ணசிங்கும் நடுவழியில் சந்தித்தார்கள்; தூக்குத் தூக்கிதான் இவன் என்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்ட போதிலும் அப்பொழுது அவன் முகத்திலிருந்த களை யையும் ஆடையாபரணங்களையும் பார்க்கும்பொழுது தன்னை அறியாமல் ஒரு வணக்கமும் வினயமும் சந் திரமுகிக்கு வந்துவிட்டது. "ஆச்சரியம்! இரண்டு நாழி கைக்கு முந்தி இவ்விடம் வேலைசெய்துகொண்டிருந்த இவன் - இவர்! இவ்வளவு சீக்கிரம் எப்படி ராஜாவா யிருக்கலாம்" என்று அவள் திகைத்தபோதிலும் கிருஷ்ணசிங்குக்கு அவள் வணங்கவேண்டியதாயிருந்

தது. • அரசரானவிதம் என்னவென்று சந்திரமுகி கேட்க எல்லாம் சீக்கிரம் சொல்லுகிறேன்; இப்பொழுது சாவகாசமில்லை இந்த நகைகளைப் போட்டுக் கொள்; ஊஞ்சலுற்சவத்துக்குப் போகவேண்டும்” என்று சொல்லி, தன் கையில் கொண்டுவந்த விலை உயர்ந்த நகைகளடங்கின பெட்டி ஒன்றைச் சந்திரமுகியிடம் சின்னராஜா கொடுத்தார். இரண்டு நாழிகைக்கு முன் தன் கட்டளைக்கு கிருஷ்ணசிங்கு உட்பட்டவனுயிருந்தபோதிலும் அப்பொழுது தான் அவர் கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டுமென்று அவர் முகக்குறிகளால் கண்டுகொண்டு மறுமொழி சொல்லாமல் நகைகளைப் போட்டுக்கொண்டாள். அதற்குள் பெரியராஜாவானவர் சின்னராஜாவுக்கு நாழிகையாய்விட்டதாகத் தெரிவித்தார். இதையும் கேட்டு சந்திரமுகி வியப்புற்று ஏதோ இருக்கிறது தெரியவில்லை எல்லாம் சாவகாசமாய் விசாரிப்போமென்று எண்ணிக்கொண்டு இருக்கையில், சின்னராஜா அவளைக் கைப்பற்றி அழைத்துக்கொண்டு வண்டி ஏறி எல்லோரும் காளிகோவிலுக்குச் சென்றார்கள். செய்த முயற்சிகள் எல்லாம் சின்னராஜாவுக்கும் சந்திரமுகிக்குமாகையால் அவர்கள் இருவரையும் வெகுகாலம் ஊஞ்சலில் வைத்து ஆட்டி மந்திரிகளும் பெரியராஜாவும் கண்குளிர்ந்தார்கள். பெரியராஜாவும் அவர் பட்டமகிஷியும் சின்னராஜாவுக்கும் சந்திரமுகிக்கும் இரண்டு முத்தாரங்கள் போட்டார்கள். சின்னராஜா தன் கழுத்தில் போட்ட

ஆரத்தை வீட்டுக்குப் போகும்பொழுது எடுத்துக் கொண்டு போவோமென்றெண்ணி அவ்விடம் நீட்டிக் கொண்டிருந்த ஒரு புன்னங்கிளையில் மாட்டிவைத்தார். மற்றும் அனேகர் ஊஞ்சலாடினார்கள். சூரியாஸ்தமனம் வரையில் எல்லாரும் ஊஞ்சலாடிவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். போகும் வழியெல்லாம் "மகா ராஜாவே நான் இரண்டுவாரமாய்க் காத்திருக்கிறேன், என் மனுவுக்கு சீக்கிரம் உத்தரவுசெய்யக் கோருகி றேன்" என்று வெகுபேர் சொல்லிக்கொண்டதற்கெல் லாம்: "ஆகட்டும் சீக்கிரம் நாளை உத்தரவாகும்" என்று கிருஷ்ணசிங்கு பதில் சொல்லிக்கொண்டு வந் தார். முதல்பாட புஸ்தகம் பதினோராம்பக்கம் படிக்கத் தெரியாத இவருக்கு என்னபதவி வந்துவிட்டது! ஆச் சரியம்! என்றெண்ணி சந்திரமுகி சின்னராஜாவுடன் தன் வீடுவந்து சேர்ந்தாள்.

வீடுவந்ததும் கிருஷ்ணசிங்கைப் பார்த்து தாங்கள் எவ்விதமாய் அரசனானீர்கள் என்று சந்திரமுகி வினவ, அவர் "அதிக ஓடுக்கமாயிருக்கிறது, சட்டைகளைக் கழற்றிவிட்டுச் சொல்லுகிறேன்" என்று சட்டைகளைக் கழற்றவே, பெரிய அரசன் போட்ட முத்தார மில் லாமலிருக்கக் கண்டு: "ஆகா முத்தாரத்தை மறந்து புன்னங்கிளையில் மாட்டி வந்துவிட்டேன் கைநொடிப் பொழுதில் எடுத்துவருகிறேன்" என்று புறப்படவே சந்திரமுகி கையைப் பிடித்துக்கொண்டு, "நான் மண்ட லேச்சுவரன் மகள் என்பது தங்களுக்குத் தெரியுமே;

அந்தமாதிரி நூறு முத்தாரம் செய்து போடுகிறேன். அதற்காக இருட்டில் போகவேண்டாம்" என்று தடுத்தாள். "அற்பமானாலும் வெகுமதியாக நமக்கு ஒன்று செய்தால் அதை அன்புடன் பெற்று ஜாக்கிரதையாய் வைத்திருந்தாலல்லவோ கொடுத்தவனுக்கு நம்மிடம் அன்பிருக்கும். நாம் அலக்ஷியம் செய்ததாகத் தெரிந்தால் கொடுத்தவர்கள் மனம் நோகும். நீ உலக சமாசாரம் தெரியாதவளாகையால் இந்தமாதிரி பேசுகிறாய்" என்று சொல்லி வெகு இருட்டாயிருந்தபோதிலும் ஆரத்தை எடுத்துவர சின்னராஜாவாகிய கிருஷ்ணசிங்கு ஓடினார்.

பகலிலிருந்த சந்தடிகள் எல்லாம் ஓய்ந்துபோனபடியால் அவ்விடம் நிம்மதியாயிருந்தது. இருட்டுக் காலத்தில் மரமடர்ந்த தோப்பில் அந்தகாரத்துக்குள் சொல்லவேணுமா? எங்கும் ஒரே இருட்டாக இருக்கவே ஆரம் வைத்த இடம்கூட தெரியாமல் அங்குமிங்கும் கையாலேயே தடவிப் பார்த்துக்கொண்டு கடைசியாய் ஆரமிருக்கும் கிளையிலேயே சின்னராஜாவாகிய கிருஷ்ணசிங்கு கையை வைத்தார். அவ்விடத்தில் அதிக பசியுடன் படமெடுத்து உட்காந்திருந்த காலஸர்ப்பம் ஒன்று அவரைத் தீண்டவே பிரக்ஞைபோய் கீழே விழுந்தார். பகலில் தான் கலியாணம் செய்துகொண்ட சந்திரமுகி இருக்கிறாள், அவளுடன் இன்னும் புருஷபதவியில் ஒரு பேச்சுக்கூட பேசவில்லை. புஷ்பபுரத்தில் தங்சிங்கு முதலான பந்துக்கள் என்னவானார்

களோ அதையும் விசாரித்தாரில்லை. ராஜ்யபாரங்களை யெல்லாம் இவர்மேல் போட்டுவிட்டு இவரையே நம்பின வராக புஷ்பபுர பெரியராஜா இருக்கிறார். அவரையும் மோசம் செய்துவிட்டு, இவருக்கே சந்திரமுகியைப் பாணிக்கிரகணம் செய்யவேண்டுமென்று ஆதிமுதல் யோசித்துக் கொண்டிருந்த மண்டலேச்சுவரனையும் மோசம்செய்துவிட்டு அநுபவிக்கவேண்டிய சுகங்கள் வெகுவாயிருக்க அவைகளையெல்லாம் அநுபவிக்க அதிர்ஷ்ட மில்லாதவர்போல அரைக்ஷணத்தில் சின்ன ராஜா சிவலோக பிராப்தியானார்; ஆனால் பிழையா மலே இறந்துவிட்டாரா என்ன என்பதைச் சற்று விசாரிப்போம்.

புஷ்பபுரம் பெரிய அரசனுக்கு புத்திரன் என்னும் பாக்யம் கிடையாதென்று முன்னமேயே சொல்லி யிருக்கிறோம்; ஆனால் அவருக்கு ஒரு பெண்ரத்தி னம் உண்டு; அழகில்மாத்திரம் ரத்தினம் என்றால் போதாது. அவளுடைய நல்நடக்கையும் தெய்வபக்தி யும் இவ்வளவவ்வளவென்று சொல்ல முடியாது. அவ ளுக்கு இந்துகலை என்று பெயர். இந்துகலையானவள் பிரதிதினம் ராத்திரி இந்தக் காளிகோவிலுக்கு வந்து அம்பிகையைப் பூசித்துவிட்டுப் போவது வழக்கம். அவளுடைய அறைக்கும் இந்தக் காளிகோவிலுக்கும் ஒரு சுரங்கம் உண்டு. அதன் வழியாய் வந்து அவள் பூசை செய்வது வழக்கம்; வழக்கப்படியே அன்று ராத்திரியும் அவள் கோவிலுக்கு வந்து சமீபத்தி

விருந்த புஷ்கரணியில் ஸ்நானஞ்செய்துவிட்டு அம்பிகையைப் பூசைசெய்து துதிசெய்து எல்லாம் முடித்து வீட்டுக்குப் போகும்முன் "அம்பிகையே இன்று பகல் ஊஞ்சலுற்சவத்துக்கு ஊரிலுள்ள சிறு பெண்களெல்லாரும் தங்கள் தங்கள் புருஷர்கள் சகிதம் போனார்கள்; எனக்கு அந்த பாக்யம் என்று அளிப்பாயோ தெரியவில்லை. அதிபுத்திமானாயும், நல்நடக்கை யுள்ளவராயும் அழகுள்ள ஒரு புருஷனை எனக்குக் கொடுத்தருள்வாயாக" என்று சொல்லி வாய்மூடும் முன்னமே "என் சந்நிதியில் ஓர் இளைஞன் படுத்திருக்கிறான், அவனே உன் புருஷன்" என்று ஒரு அசரீரிவாக்கு பிறந்தது. அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு அப்படியே போய்ப் பார்க்க, சந்நிதியில் படுத்திருக்கும் புருஷன் பிரேதமாய்க் கிடக்கக் கண்டு, தனக்குக் கலியாணம் நிஜமாகவே நடந்திருந்து, புருஷன் இறந்தால் எப்படியோ அப்படியே அவனை எதார்த்த புருஷனாகப் பாவித்துத் தலையை விரித்துக்கொண்டு பிரேதத்தைக் கட்டி துக்கம் பொறுக்கமாட்டாமல் "இத்தனைநாள் செய்த பூசைக்கெல்லாம் இந்தப் பிரேதநாதனா! பலன்" என்று வாய்விட்டுக் கதறத் தலைப்பட்டாள். இவள் புலம்ப ஆரம்பித்த இரண்டு நாழிகைக்கெல்லாம் மற்றொரு அசரீரிவாக்கு உண்டாயிற்று. "செய்த பூசைக்கு இதுதானா பலன் என்று நீ என்னை வெறுக்க வேண்டாம், இவைகளெல்லாம் உன்னைப் பரீக்ஷிக்க நான் செய்த காரியங்கள். நீ எழுந்திருந்து புஷ்கரணி

யில் மறுபடி ஸ்நானஞ்செய்து என் சந்நிதிக்கு வந்து என் பாதாரவிந்தங்களிலிருக்கும் குங்குமத்தில் கொஞ் சம் எடுத்துச் செத்துக்கிடக்கும் உன் புருஷன்முகத் தில் இடுவாயாகில் உடனே அவர் பிழைப்பார்" என்று சொல்லிற்று. அந்தப்படியே இந்துகலையும் செய்ய, சின்னராஜாவான கிருஷ்ணசிங்கு தூங்கி விழித்தவன் போல விழித்துக்கொண்டார்.

அவர் விழித்துக்கொண்டவுடன் ஆரத்தை யெடு த்து கழுத்தில் போட்டுக்கொண்டு வீட்டுக்குப் புறப் பட்டார். உடனே இந்துகலை கையை பிடித்துக்கொ ண்டு "அம்பிகை தங்களை எனக்குப் புருஷனாக அளித் தாள்; நான் இந்த ஊர் ராஜாவின் மகள். தயவுசெய்து அரண்மனைக்கு வந்து என்னை மணம்புரியப் பிரார்த் திக்கிறேன்" என்றாள். இதைக் கேட்டதும் இவர் திடுக்கிட்டு இதென்ன ஆச்சரியம்! நாம் ஆரம் எடு க்கவந்த இடத்தில் யாரோ ஒரு பெண் என்னைப் புரு ஷனாகப் பாவித்துப் பேசுகிறாளே என்று வியப்புற்ற வனாய் "நான் இன்று பகல்தான் மண்டலேச்சுவரன் மகள் சந்திரமுகியை மணம்புரிந்தேன். நீ யாரோ எனக்குத் தெரியாது, நீ என் பத்தினி அல்ல" என்று சொல்லிக்கொண் டிருக்கும்பொழுதே சந்திரமுகியும் செல்லமும் அவ்விடம் வந்துவிட்டார்கள். சின்னராஜா போய் வெகு நேரமாயும் வராமலிருக்கவே என்ன வோ ஏதோ என்று சந்திரமுகி பயந்து நிசிவேளையா யும் புருஷனைக் காணாமல், அவரைப் பார்த்து அழை

த்துவர ஆவல்கொண்டவளா யிருந்தபடியால் பயமென் பதே இல்லாமல் சேல்லம் சகிதம் அவ்விடம் வந்து விட்டாள். அவ்விடம் தன் பிராணநாதன் கையை மற் றொருத்தி பற்றிக்கொண்டிருக்கக் கண்டு கோபங்கொ ண்டு இரண்டு ராஜகுமாரத்திகளும் என் புருஷன், உன் புருஷன் என்று வாதிக்க ஆரம்பித்தார்கள் ; இம் மாதிரி வாதத்திலேயே பொழுது விடிந்துவிட்டது. தோப்பில் இவர்கள் இப்படி வாதிப்பது பெரியராஜா காதுக்கு எட்டி, அவர் அவ்விடம் வந்து சங்கதியை யெல்லாம் அறிந்துகொண்டவராய் செய்வது இன்ன தென்று சற்றுநேரம் தோன்றாமல் கடைசியாய் இப் படி வாதிப்பதில் பலம் ஒன்றும் காணோம்; நீங்கள் இரு வரும் இவரைப் புருஷனாக அடைந்து அக்காள் தங் கைகள்போல வாழவேண்டுமென்று சொல்லி எல்லோ ரையும் அழைத்துக்கொண்டு அரண்மனை போய்ச் சேர்ந்தார். தெய்வயத்தனமாய் சின்னராஜாவுக்கு தன் அருமைமகளைக் கொடுக்கும்படி வந்ததில், பெரிய ராஜாவுக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. உடனே ஒரு நல்ல முகூர்த்தம் பார்த்து அர சர்களுக்கெல்லாம் மணவோலை எழுதிவிட்டார். மண்ட லேச்சுவரருக்கும் கிருஷ்ணசிங்கு கலியாணத்துக்கு வரும்படியும், சந்திரமுகிக்கும் அன்று கலியாண மென்பதையும் தெரிவித்தார். அவர் அந்தப் பத்திரி கையை கண்டவுடன் அதிக சந்தோஷப்பட்டு தன் மக ளுக்கு புஷ்பபுரத்தில் அவ்விடத்து அரசனுக்குக் கலி

யாணம் செய்து கொடுப்பதாக எல்லோருக்கும் தெரிவித்து, எல்லாருடனும் புறப்பட்டு அளவற்ற ஆடை ஆபாரணங்களுடனும் திரவியத்துடனும் கலியாணத்துக்கு ஒருமாதம் முன்னுடியே வந்து சேர்ந்தார். சின்ன ராஜாவாகிற கிருஷ்ணசிங்கு நடந்த சங்கதிகளெயெல்லாம் அவருக்குமட்டும் தெரிவித்து, அவர் மனதைக் களிப்பித்தார். மண்டலேச்சுவரரும் இவ்வளவு வல்லமையும் புத்தியுமுள்ள ஒருவரை தான் மருமகனாக அடைந்ததற்கு அதிக ஸந்தோஷமடைந்தார். மற்று மனேக அரசர்கள் தங்கள் தங்கள் பரிவாரங்கள் சகிதம் வந்தார்கள். மண்டலேச்சுவரர் மகளுக்குக் கலியாணமாகையால் ஐம்பத்தாறு தேசத்திலிருந்தும் அரசர்கள் எல்லோரும் வந்து கலியாண மகோற்சவத்தைச் சிறப்பித்தார்கள். அவர்கள் கிருஷ்ணசிங்காகிய புஷ்பபுரம் சின்னராஜாவையும் சந்திரமுகி, இந்துகலேகளேயும் ஆசீர்வதித்து, தம்பதிகளுக்கு வேண்டிய சம்மானங்கள் செய்து அவர்கள் செய்த பிரதி சம்மானங்களேயும் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் ஊர்போய்ச் சேர்ந்தார்கள். மண்டலேச்சுவரர்மட்டும் கொஞ்சநாளிருந்தார்.

கதை அனேகமாய் முடிந்துவிட்டது. தங்சிங்கு என்னவானுர்? முதலில் புஷ்பபுரத்தை விட்டு ஓடும் பொழுது கிருஷ்ணசிங்கு காளி கோவில் ப்ராகார பிறையில் ஒளித்த செருப்புகள் என்னவாயின? கிருஷ்ணசிங்கு மறுபடி புஷ்பபுரம் வந்து சேர்ந்தவுடன் தன்

ளைப் பெற்றோர்கள் என்னவானார்களென்று விசாரிக்காமலிருக்கவில்லை. வந்தவுடன் விசாரித்து அவர்கள் அதிக செலவு செய்துகொண்டிருந்ததால் மறுபடி வறுமையை யடைந்து பங்களாமுதலான ஆஸ்திகளை விற்றுவிட்டு சாதாரண ஜனங்களுக்கும் கீழோராய் இருப்பதாகக் கேள்விப்பட்டு கிருஷ்ணசிங்கு மனவருத்தப்பட்டு, நாம் அவர்களை இப்பொழுது பார்ப்பது ஸரியல்ல, காரியங்கள் கைகூடினபிறகு பார்ப்போம் என்று இருந்துவிட்டார். எல்லாம் நினைத்தபடி முடிந்தவுடன் கிருஷ்ணசிங்கு ஒருநாள் தன் தகப்பனார் தாயார் தமையன்மார்கள் இருக்குமிடத்திற்கு ஆட்களை அனுப்பி அவர்களை கையுடன் அழைத்துவரக் கட்டளையிட்டு காளிகோவிலுக்கு ஒரு பல்லக்கனுப்பி அதில் செருப்புகளைக் கொண்டுவரக் கட்டளையிட்டார்.

தந்சிங்கு தன்னைக் குடும்பத்துடன் அரசனழைப்பதாய்க் கேள்விப்பட்டு, தனக்கு வரப்போகிற பாக்யம் இன்னதென்று தெரியாமல் ஒருகால் நாம் என்ன ராஜாபராதம் செய்தோமோ, என்ன தண்டனை நமக்கு ஆகப்போகிறதோ என்று நடுங்கிக்கொண்டே அரண்மனை வந்து சேர்ந்தார்கள். இவர்களைக் கண்டவுடன் கிருஷ்ணசிங்குக்கு அடக்கக்கூடாத துக்கம் வந்துவிட்டது. சீக்கிரம் ஒருவருக்கும் காட்டிக்கொள்ளாமல் அடக்கிக்கொண்டு அவர்களை அரண்மனைக்குள் அழைத்துப் போய் ஸ்நானஞ் செய்வித்து நல்ல ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு வரக் கட்டளையிட்டார்.

சின்னராஜாவாகிய கிருஷ்ணசிங்குக்குமட்டில் அவர்கள் இன்னாரென்று தெரிந்ததேயல்லாமல் இவ்வளவு செய்பவர் தங்கள் அருமை மகனென்று அவர்கள் அறியவேயில்லை. கடைசியாய் ஸ்நானஞ்செய்து அலங்காரம் பண்ணிக்கொண்டு தங்சிங்கு கமலாபாய் ராமசிங்கு லக்ஷ்மணசிங்கு நான்குபேரும் வந்துவிட்டார்கள். அவர்கள் முன்னிலும் புஷ்பபுரம் பெரியராஜா முன்னும், மண்டலேச்சுவரன் முன்னும் தான் பிறந்து வளர்ந்தது முதல், அதுவரையில் நடந்த ஸங்கதிகளெயெல்லாம் சொல்லி பல்லக்கில் வந்திருந்த செருப்புகளைக் காட்டி, கடைசியாய் எல்லாம் இந்தச் செருப்பின் பாக்கியம்; என் தகப்பனார் என்னை இந்தச் செருப்பால் அடித்திராவிட்டால் இப்படி முடிந்திருக்கமாட்டாதென்று தெரிவித்தார். பெற்றோர்களும் தமையன்மாரும் தங்கள் கிருஷ்ணசிங்கைக்கண்டு ஆநந்தபாஷ்பம் வடித்தார்கள். சின்னராஜாவும் அன்றுமுதல் அவர்களை அரண்மனையில் வைத்துக்கொண்டு "தந்தை தாய்ப் பேண்" என்னும் பழமொழிப்படி தன் கடமையை நடத்திவந்தார்.

கிருஷ்ணசிங்கு ஒரு பெரிய மண்டலேச்சுவரனாயும், புஷ்பபுரம் ராஜாவாயும் வெகுகாலம் இருந்தார். அவருக்கு அநேகம் பிள்ளைகள் பிறந்தன. புஷ்பபுரம் பெரியராஜாவும் தாராபுரம் மண்டலேச்சுவரனும் தௌஹித்ரர்களைக் கண்டு தங்களுடைய பிள்ளையில்லாத குறைவை மறந்தார்கள். அத்யானந்தத்தில்

முழுகி வெகுகாலம் கிருஷ்ணசிங்கு ராஜ்யபரிபாலனம் பண்ணினார்.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்சியின்மை
இன்மை புகுத்தி விடும்."

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

முற்றிற்று

[library stamp, illegible]

The Vaijayanti Press, Mount Road, Madras.